உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 31 | பரிதாபி – சித்திரை – 10 – 5 – 72 | இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

அருள் விளக்கு

உலகில் உள்ள பொருள்கள் அளவிறந்தன. அவை அனைத்தும், 'ஒன்றோடு மற்றொன்று இணங்கி நிற்பனவே' என்பதற்கில்லை. ஏனெனில், ஒன்றுக்கு ஒன்று நேர் மாறான பொருள்களும் அவற்றில் உள்ளன. ஆகவே, 'நன்மை, தீமை' என்பவற்றில் உலகம் ஒன்றையே உடையதன்று: நன்மை, தீமை இரண்டையும் உடையதே உலகம்.

ஒளி, இருள் - பகல், இரவு - குளிர், வெப்பம் - செல்வம், வறுமை - இப்படிக் கண்கூடாகக் காணப்படுகின்ற மறுதலைப் பொருள்கள் பல. இவைபோலத்தான், நுணுகி நோக்கி அறியத்தக்க பொருள்களிலும் தம்முள் மறுதலைப் பட்ட பொருள்கள் பல உள்ளன. அவற்றை 'அறிவு-

அறியாமை - அறம், மறம் - அருள், கொடுமை' முதலிய பலவாகக் கூறலாம். இங்குக் கூறிய மறுதலைப் பொருள்கள், 'ஒன்று உள்ள இடத்தில் மற்றொன்று இராது' என்பது போலத் தோன்றினாலும், இரு வேறு பொருள்களுக்கும் உலகம் ஒன்றே இடமாய் இருக்கின்றது. இதனை உமாபதி தேவ நாயனார் தமது 'கொடிக் கவி' என்னும் நூலில்,

"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்"

என்று அழகுபடக் கூறினார்.

இவ்வாறு கூறிய அவர் உடனே மற்றொன்றையும் கூறியிருத்தலைப் பார்க்கவேண்டும் :-

"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ;
ஒன்று மேலிடின் ஒன்று
ஒளிக்கும் ; எனினும், இருள் அடராது"

அஃதாவது, 'ஒளியும், இருளும் ஒன்றுக்கொன்று மறுதலையாய், ஒன்று மிகுந்துள்ள இடத்தில் மற்றொன்று தலையெடுக்காது என்பது உண்மையாயினும், ஒளியை வெல்லும் ஆற்றல் இருளுக்கு இல்லை ; இருளை வெல்லும் ஆற்றல் ஒளிக்கு உண்டு' என்று குறிப்பிடுகின்றார். 'இது கண் கூடான உண்மை' என்பது யாவரும் அறிந்தது. இந்த உண்மையின் அடிப்படையில்தான், 'அறமே வெல்லும் - வாய்மையே வெல்லும் - நன்மையே வெல்லும்' என்னும் நம்பிக்கைகள் நிலைத்து நிற்கின்றன. இவை வெறும் நம்பிக்கையாக மட்டும் இல்லாமல், முழு உண்மை என்பதைப் பல வரலாறுகள் உணர்த்துகின்றன. தீமை வெல்வது போலச் சில வேளைகளில் தோன்றலாம் ; அஃது அப்பொழுது சிறிது காலத்திற்கே யன்றி, என்றும் நின்றும் நிலைப்பது அன்று. 'தீமை தீமையைப் பயக்குமேயன்றி, ஒரு காலத்திலும் நன்மையைப் பயவாது' என்பதைத் திருவள்ளுவர்,

*"தீயவை தீய பயத்தலால், தீயவை
தீயினும் அஞ்சப் படும்"*

என்று அறுதியிட்டுக் கூறுகின்றார்.

உண்மை நூல்களின் துணிவும், உண்மை நிகழ்ச்சிகளும் இக்குறளின்படியேதான் உள்ளன. ஆயினும், அவற்றை அவ்வாறு உணர்ந்துகொள்ளும் ஆற்றல் நமக்கு இல்லை.

நன்மை, தீமை இரண்டிற்கும் ஒரே இடமான உலகத்தில், அறிவாகிய ஒளி, அறியாமையாகிய இருள்-இரண்டும் இருத்தலும், கால வேறுபாட்டால், பகல் இரவுபோல அவற்றுள் ஒன்று ஒரு காலத்தில் மிகுதலும், மற்றொன்று மற்றொரு காலத்தில் மிகுதலும் இயல்பே. ஆயினும், என்றும் அறிவே அறியாமையை வென்று மேம்படுதல் திண்ணம்.

அறியாமை பலவற்றுள்ளும் தலையாயது இறைவனது அருளை அறியாதிருத்தல்; அவ்வாறே, அறிவு பலவற்றுள்ளும் தலையாயது இறைவனது அருளை அறிதல். அதனால்தான், 'அறியாமை' என்றும், 'அறிவு' என்றுமே பொருள் தரக்கூடிய 'அஞ்ஞானம், ஞானம்' என்னும் சொற்களை மேற்குறித்த பொருளிலேயே வழங்குகின்றோம்.

அஞ்ஞானத்தின் மிகுதியால், இறைவனது அருளை அறியாமை மட்டுமன்றி, அறிபவர்களை இகழ்ந்து பேசும் நிலையும் உண்டாகின்ற காலத்தில், அவ் அருளை விளக்கி நிற்கும் அருள் விளக்குக்களாக அருளாளர் பலர் இறைவனது அருளால் உலகில் தோன்றி, அருளை விளக்கிச் செல்கின்றார்கள். ஏறக்குறைய ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன்னர்த் தமிழகத்தில் சோழநாட்டில், சீகாழிப்பதியில் திருஞானசம்பந்தர் தோன்றிப் பாண்டிநாடு சென்று சமண் இருள் நீக்கித் திருநீற்றொளி பரப்பி, அருள் விளக்கம் செய்தார். அதற்குப்பின் சற்று ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன்னர்த் தென்பாண்டி நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் தோன்றித் தென்பாண்டி நாட்டானாகிய திருவாலவாய்ப்பெருமான் திருவருளின்வழிச் சோழநாட்டை அடைந்து, திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானத்தில் வந்து, ஆசிரியத் தன்மை பெற்றுத் திகழ்ந்த கமலை ஞானப்பிரகாச தேசிகர்பால் ஞானோபதேசமும், ஞானபூசை

யும் பெற்று, அவர் அருளாணையின்படி காவிரிக்கரையில் மாயூரத்திற்குக் கிழக்கில் வில்வாரணியமாய் விளங்கிய தருமபுரத்தில் ஞானபீடம் நிறுவி, ஞான ஒளிபரப்பி அருள் விளக்காக வீற்றிருந்தருளினர்.

முன்பு செய் தவத்தின் ஈட்டத்தால் ஸ்ரீகுருஞானசம்பந்தர் பால் காணப்பட்ட அருள் நிகழ்ச்சிகள் பற்பல. ஞான சம்பந்தர் போலவே அருளொளி பரப்பி அகிலம் உய்யச் செய்தற்கு அறிகுறியாக 'ஞானசம்பந்தர்' என்பது இவருக்குப் பெற்றோர் இட்ட பிள்ளைமைப் பெயராகவே அமைந்தது. இளமையிலேயே கல்வி அறிவு நிரம்பப் பெற்ற இவர், தம் பெற்றோருடன் தங்கள் வழிபடு கடவுளாகிய ஆலவாய்ப் பெருமானைத் தரிசிக்கச் சென்றபொழுதே, 'அவர்கள் உடலுக்குத்தான் தாய் தந்தையர்; ஆனால் உயிருக்குத் தொடர்ந்து நின்ற தாயாகவும், தந்தையாகவும் இருப்பவன் தென்கூடல் திருவாலவாய்ச் சிவனே' எனத் தெளிந்து, அழைத்து வந்த பெற்றோருடன் செல்ல மறுத்து, அங்கயற் கண்ணி பங்கனுகிய ஆலவாய் அப்பனிடமே இருந்துவிட்டார்.

இருக்கும் நாட்களில் ஒருநாள் அப்பெருமான் கனவில் தோன்றி அருளிச்செய்தபடி, மறுநாள் பொற்றாமரைத் தீர்த்தத்தில் முழுகியபொழுது முற்பிறப்பிலே பூசிக்கப்பெற்ற ஆன்மார்த்த உடையவர் பெட்டகத்தோடு கண்ணுக்கினிய பொருளாய்க் கரத்திலே கிடைக்கப் பெற்றார். மேலும் ஆலவாய்ப் பெருமான் அருள்வழி ஆரூரை அடைந்து, கமலை ஞானப்பிரகாசர்பால் ஞானோபதேசத்துடன், ஞானபூசா விதிப்படி ஆன்மார்த்த பூசையும் எழுந்தருள்விக்கப்பெற்றார். பெற்று ஆசாரியரிடத்தே இருக்கும் நாட்களில் ஒருநாள் குருமூர்த்திகள் திருக்கோயில் வழிபாட்டிற்கு எழுந்தருளிய பொழுது, கைவிளக்குப் பணியாளன் உறங்கிவிட, அக விளக்காய் விளங்கும் ஆசாரியருக்குப் புறவிளக்கு எடுக்கும் பணியைத் தாமே செய்தார். இல்லத்திற்கு மீண்டபொழுது குருமூர்த்திகள், 'நில்' என்று சொல்லி உள்ளே சென்று விட, எப்பொழுதும் அருள் விளக்கையே நாடி நிற்பவராகிய குரு ஞானசம்பந்தரை குருமூர்த்திகளது 'நில்' என்ற சொல்,

அருள் விளக்கின் ஒளியிலே நிற்கச் செய்தது. அதனால் அவர், கைவிளக்கை - ஏன் உலகத்தையே மறந்து அருள் ஒளியிலே அழுந்தி விடியுமளவும் நின்றார். அவரது சிறப்பை விளக்க வந்த மழை, அவருக்கு இடையூறு விளைக்காமல் சூழவே பெய்தது. எல்லாவற்றையும் அறிந்த குருமூர்த்திகள், தருமை சென்று குருஞானசம்பந்தர் என்னும் பெயருடன் அருள் விளக்காக விளங்கி, அருளொளி பரப்புமாறு இட்ட கட்டளையின்படி ஸ்ரீ குருஞானசம்பந்தர், திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன ஞானபீடத் தாபகராய்ப் பற்பல அற்புதங்களை நிகழ்த்திச் சமய பரிபாலனம் செய்து விளங்கினார். அவரது ஆண்டுக் குருபூசை விழா அண்மையில் வர இருப்பது, அருளொளியை நாடும் அன்பர் பலர்க்கும் அக மகிழ்வைத் தருவதாகும்.

குருபூசையை முன்னிட்டு நிகழும் ஞானபுரீசர் பத்துநாட் பெருவிழா, சமய வகுப்பு, சமயச் சொற்பொழிவு முதலியவற்றை அன்பர்கள் கண்டும், கேட்டும் வழிபட்டு, அருள் விளக்கத்திற்கு உரியவர் ஆவார்களாக.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkali.

"I am very happy that this ancient temple famous from the history of Tirugnanasambandar is maintained meticulously clean and provided a very serene and solemn atmosphere, to the visitor. Everyone should be very grateful to the dedicated service of Sri Sourirajan who is sparing no pains towards the maintenance of the temple in a very good condition."

31...3...72 (Sd.) R. C Ramakrishnan.
Director of Telegraphs,
Tamil Nadu Circle

திருவருட்பயன் விளக்க உரை

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான்,
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

(மலர் 31, இதழ் 4, பக்கம் 235 - இன் தொடர்ச்சி)

6 ஆம் அதி: அறியும் நெறி,

அஃதாவது, ஞானகுரு அறிவுறுத்தருளிய அருள்மொழியின் பொருளைச் சிந்தித்து உணரும் முறை. இதனானே முன்னை அதிகாரத்தோடு இவ்வதிகாரத்திற்கு உள்ள இயைபு இனிது விளங்கும்.

முதற் குறள்

" நீடும் இருவினைகள் நேராக நேராதல்
கூடும் இறைசத்தி கொளல் "

எனவரும்.

இதன்பொருள் :- நீடும் இருவினைகள் நேராக நேராதல் – ஒன்றின் ஒன்றாய் முடிவின்றித் தோன்றிவருகின்ற இரு வினைகளது பயன்களையும் நுகர்வோன் அவற்றை ஒரு பெற்றியவாக உணர்ந்து திரிவின்றி நிற்குங் காலத்தில்; இறை சத்தி கொளல் கூடும் - இறைவனது திருவருளை அவன் பெறுதல் கூடும்.

விளக்க உரை : எனவே, ' நல்வினைப் பயனாகிய இன்பத்தை, அடையத் தக்கதாகவும், தீவினைப் பயனாகிய துன்பத்தை, விலக்கத் தக்கதாகவும் வேறுபட உணர்ந்து, முறையே அவற்றில் விருப்பும், வெறுப்பும் கொண்டு நிற்கும் வரையில் இறைவன் திருவருளைப் பெறுதல் கூடாது ' என்பது விளங்கிற்று. ' நேராதல் ' இரண்டில். முன்னது சமமாதல்; பின்னது உடன்படல். ' நேராதற் கண் ' என உருபு விரிக்க.

இரு வினைகளையும் செய்து கொண்டவன் தானே யாகலின், அவற்றுள் ஒன்றன் பயனை விரும்பி ஏற்றலும், மற்றொன்றின் பயனை வெறுத்து நீக்கலும் பேதைமைச் செயல் என்பது கருத்து.

" நன்றாங்கால் நல்லவாக் காண்பவர், அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன் " *

என்றார் திருவள்ளுவ நாயனாரும்.

பழ வினைகள் தம் பயனை விளைக்குங்கால் அவ்வினைவினை முற்குறிகளால் உணருமிடத்து, மேற்கூறியவாறு விருப்பத்தால் இன்பத்தை விரையப் பெறவும், பெற்றபின் அது நீங்காமற் காக்கவும் - அவ்வாறே துன்பத்தைச் சேய்மைக்கண்ணே துரக்கவும், வந்தபின்னும் விரையப் போக்கவும் மனமொழிமெய்களால் செய்யும் முயற்சிகளே பின்னர்ப் புதுவினைகளாய் அடுத்த பிறப்பிற்கு வித்தாய் நிலைபெறுகின்றன. ஆகவே, இவ்வாற்றால் வினைகள் முடிவின்றி வருதலையே, " நீடும் இருவினைகள் " என்றார் என்க.

இரு வினைகளின் பயனை ஒரு பெற்றியவாக நோக்கி, விருப்பு வெறுப்பின்றி நடுவு நிலையாய் நிற்கும் தன்மையே, " இருவினையொப்பு " எனச் சித்தாந்தத்திற் சொல்லப்படுகின்றது.

" ஆறுச் செல்வத்து வானோர் இன்ப
மதுவே எய்தினும் எய்துக ... ...
... ... மாணக் கடுந்துயர்
நிரயஞ் சேரினும் சேர்க; உரையிடை
ஏனோர் என்னை ஆனது விரும்பி
நல்லன் எனினும் என்க; அவரே
அல்லன் எனினும் என்க; நில்லாத்
திருவொடு திளைத்துப் பெருவளம் சிதையா(து)
இன்பத் தழுந்தினும் அழுந்துக; அல்லாத்
துன்பந் துதையினும் துதைக ... ...
... ... ஒன்றினும்
வேண்டலும் இலனே ; வெறுத்தலும் இலனே " $

என்றாற்போல வரும் அருட்டிருமொழிகளை இங்கு நினைவு கூர்க.

உயிர்களின் அறிவை அறியாமையுட்பட்டு மயங்கச் செய்வது ஆணவ மலம். அது நீங்கும் நிலைமையை அடைவது 'மலபரிபாகம்' எனப்படும். அந்த மலபரிபாகத்தின் அறிகுறியே

---

* குறள் - 379.

$ கோயில் நான்மணி மாலை - 36.

இருவினை யொப்பு: எனவே, இருவினை ஒப்பின் வழி அறியப்படுகின்ற மலபரிபாகம் வந்தபொழுதே, உயிர் உலகத்தை விடுத்து இறைவனது திருவருளை நோக்கத் தலைப்படும். அந்நிலையே 'சத்தி நிபாதம்' எனப்படும் என்பது தோன்ற, 'இறை அருள் கொளல்' என்னுமல், ''இறை சத்தி கொளல்" என்றார். சத்தியே அருளாதல் அறிக. நிபாதம் - வீழ்தல். தோன்றல், புலனுதல், புதிதல் முதலிய பிற சொற்களாற் கூறுமல், 'விழ்தல்' எனக் கூறுதல், இந்நிலை வந்தவர்கட்குத் திடீரென ஓரிடத்தில் ஒரு கல் வந்து விழுந்தது போன்றதோர் அதிர்ச்சி உண்டாதல் பற்றியாம்.

இறைவனது அருள் குருவடிவாயும், குருமொழியாயும்' குருவினது நோக்கு முதலிய செய்கையாயும் நிற்கும். அவற்றுள் மொழியாய் நிற்கும் அருளே இக் குறளில் குறிக்கப்பட்டது. எனவே, இருவினை ஒப்பு மலபரிபாகம் இல்லாதார்க்குக் குருமொழி மெய்ம்மொழியாய் நின்று பயன் தருதல் இல்லையாயிற்று

இதனால், 'அறியும் நெறிக்கு வாயில் இது' என்பது கூறப்பட்டது.

இரண்டாவது குறள்,

''ஏகன், அனேகன், இருள்,கருமம், மாயையிரண்(டு)
ஆகஇவை ஆ(று)ஆதி இல்"

எனவரும்.

இதன்பொருள் :- ஏகன் - ஒருவனாகிய இறைவனும்; அனேகன் - பொருளால் பலவாம் தன்மையுடைய உயிர்க்கிழவனும்; இருள் - ஆணவமும்; கருமம் - வினையும்; மாயை இரண்டு - சுத்த மாயை, அசுத்த மாயை என்னும் இரு மாயையும்; ஆக இவை ஆறு ஆதி இல் - ஆக இந்த ஆறு பொருள்கள் தோற்றத்தை உடையன அல்ல

விளக்க உரை :- 'தோற்றத்தை இல்லன' எனவே, 'அழிவையும் இல்லன' என்பது போந்தது; என்னை? யாது தோற்றம் இல்லது, அஃது அழிவும் இல்லதாகலின். இவ்வாறு,

தோற்ற அழிவுகள் இல்லன, 'என்றும் உள்ள பொருள்கள்' (நித்தப் பொருள்கள்) எனப்படும். ஆதி - முதல்; தோற்றம். ஆதி இன்மை, 'அநாதி' எனப்படும். பொருட் பெற்றிகள் பலவற்றுள், 'ஒன்றாயிருக்கும் தன்மை, பலவாயிருக்குந் தன்மை' என்பனவும் சிலவாகலின், அத்தன்மைகள் பற்றி, "ஏகன்" என்றும், 'அனேகன்' என்றும் ஓதினர். இறையை, 'இறைவன்' என ஆண்பாலாக வழங்குதல்போல, உயிரை, 'புருடன், உயிர்க் கிழவன்' என வழங்குதலும் வழக்கென்க.

"ஆறு" என்பது முன்னர் அறியப்பட்டதன்றாகலின், 'ஆறும்' என உம்மை பெறாதாயிற்று. உயர்திணை, அஃறிணை இரண்டனையும் தொகுத்துக் கூறுங்கால் "ஆறு" என அஃறிணையாற் கூறியது,

"பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே" *

என்னும் இலக்கணம் பற்றியது. "ஆதி இல்" எனக் குறிப்பு முற்றாக ஓதினரேனும், 'ஆதி இல்லன' எனக் குறிப்பு முற்றுப் பெயராக ஓதுதல் கருத்தென்க.

"இவை ஆறு ஆதி இல்" என்றதனால், 'நித்தப் பொருள் ஆறு உள்ளன என உணர்தல் வேண்டும்' என்றதாயிற்று. இது சித்தாந்தத்துட் கொள்ளப்படும் பொருள் உண்மை என்க. பிற சமயத்தவர் இவற்றுள் சிலவற்றையோ, பலவற்றையோ உணரார்.

ஏகன் முதலிய ஆறனுள், இறுதி மூன்றும் 'பாசம்' என ஒன்றாகக் கூறப்படும். முதலதும், இரண்டாவதும் முறையே 'பதி' எனவும், 'பசு' எனவும் படும். பதி - காப்பவன். பசு - கட்டப்பட்டது. பாசம் - கட்டுவது 'பதி, பசு, பாசம்' எனச் சித்தாந்தத்துட் கொள்ளப்படும் பொருள் மூன்று என்பதனை இங்கு உணர்ந்துகொள்க. இம் மூன்றனது இயல்புகளும் முதல் மூன்று அதிகாரங்களுட் கூறப்பட்டமை காண்க.

இதனால், பொருளுண்மையை உணருமாறு கூறப்பட்டது.

* தொல். சொல் - 51.

மூன்றுவது குறள்,

" செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்
உய்வா னுளனென் றுணர் "

எனவரும்.

இதன் பொருள் :- உய்வான் - (மாணவகனே,) நீ உய்தி பெறுதற்கு; 'செய்வானும் - வினையைச் செய்பவனுகிய நீயும்; செய்வினையும் - உன்னுல் செய்யப்படும் வினையும்; சேர் பயனும் - அவ் வினையின் வழி உன்னை வந்து அடைகின்ற இன்பத்துன்ப விளைவுகளும்; சேர்ப்பவனும் - அவ்விளைவுகளை உன்பால் சேர்ப்பிப் பவனுகிய இறைவனும் (ஆக நான்கு பொருள்களை) உளன் என்று உணர் - 'யான் உடையேன்' என்று உன்னை உள்ளவாறு உணர்வாயாக.

விளக்க உரை :- " செய்வான் " என்றது முற் குறளில், " அனேகன் " எனப்பட்ட உயிரையும், " செய்வினை " என்றது, " கருமம் " என்றதையும், " சேர் பயன் " என்றது மாயையையும், " சேர்ப்பவன் " என்றது, " ஏகன் " எனப்பட்ட இறைவனையும் ஆதல் அறிந்து கொள்க. " இருள் " எனப்பட்ட ஆணவம், வினைக்கு ஏதுவாய் அடங்கிற்று. திருவள்ளுவரும் வினையை, " இருள்சேர் இருவினை " * என்றார். ஏகன் முதலிய ஆறனையும் இத்தன்மைப் படுத்துக் கூறியது, 'முன்னர் வேறு வேருகக் கூறப்பட்ட அவை, தம்முள் இம் முறையான் இயைந்து நிற்கும்' என்பது உணர்த்துதற்கு. எனவே, 'அவை இவ்வாறு இயைந்து நிற்றலானே பந்தமும், வீடும் ஆகிய நிலை வேறுபாடுகள் நிகழ் கின்றன' என்பதும், 'அவற்றுள் ஒன்று இல்வழியும் அவை நிகழா' என்பதும் போந்தன. 'பசு, பாசம்' என்னும் பெயர் களால் பந்தம் உண்மையும், 'பதி' என்னும் பெயரால் வீடு உண்மையும் அறியப்படும். பந்தம் - கட்டு. வீடு - விடுதலை.

இதனுல், மேற்கூறிய ஆறு பொருள்கட்கும் தம்முள் இயை புணரும் முகத்தால், அவற்றது உண்மையைத் தெளிய உணரு மாறு கூறப்பட்டது.

(தொடரும்

---

* குறள் - 5,

திருமந்திரம் - மூலமும் உரையும்

திருக்குறள்வேள்,
திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A.,

(மலர் 31. இதழ் 5. பக்கம் 300 இன் தொடர்ச்சி)

244 திறந்தரு முத்தியுஞ் செல்வமும் வேண்டின்
மறந்தும் அறநெறியே ஆற்றல் வேண்டுஞ்
சிறந்தநீர் ஞாலஞ் செய்தொழில் யாவையும்
அறைந்திடில் வேந்தனுக் காறிலொன் றாமே.

திறந்தரு முத்தியுஞ் செல்வமும் வேண்டின் - மேன்மையான மறுமைக்குரிய முத்தியும் இம்மைக்குரிய செல்வமும் வேண்டினால், மறந்தும் அறநெறியே ஆற்றல் வேண்டும்- அரசன் எப்போதும் நாட்டில் அறத்தையே நிலைநாட்ட வேண்டும். சிறந்த நீர் ஞாலஞ் செய்தொழில் யாவையும் - சிறந்த கடலால் சூழப்பட்ட உலகில் வாழும் மக்கள் ஆகியோர் செய்கின்ற நல்வினை, தீவினைப் பயன் யாவும், அறைந்திடில் வேந்தனுக்கு ஆறில் ஒன்றாமே - சொல்லப்புகின் அரசனுக்கு நன்மையோடு தீமையினும் ஆறில் ஒருபங்கு உண்டாகும்.

அறநெறி ஆற்றலாவது, தான் அறநெறியில் நிற்றலோடு மக்களையும் அறநெறியில் நிறுத்தல். குடிமக்கள் செய்த நல்வினை தீவினைப் பயன் அரசனைச் சாருமாதலின், அந்நெறியில் ஒழுகச் செய்யாது விடுதல் அரசனுக்குரிய குற்றமாம்.

அரசன் இம்மை மறுமைப் பயன் வேண்டின் மக்களை நன்னெறியில் நிறுத்தல் வேண்டும்.

245 வேந்தன் உலகை மிகநன்று காப்பது
வாய்ந்த மனிதர்கள் அவ்வழி யாநிற்பர்
பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தாங்கொள்ளப்
பாய்ந்த புலியன்ன பாவகத் தானே.

வேந்தன் உலகை மிகநன்று காப்பது - அரசன் உலகைக் காப்பது மிகநன்றாய் இருக்கிறது! வாய்ந்த மனிதர்கள் அவ்

வழியா நிற்பர் - அரசனைப் போன்றே அங்குள்ள மக்களும் இருப்பர். பேர்ந்து இவ்வுலகைப் பிறர்கொள்ள - மாறு கொண்டு இவனது நாட்டைப் பிறநாட்டான் கைப்பற்றவும், தான் கொள்ள - பிறர் நாட்டைத் தான் போரிட்டுக் கைப்பற்ற வும், பாய்ந்த புலியன்ன பாவகத்தானே - இவன் விளைவறியாது பாய்கின்ற புலிபோன்ற கொடியவனுவான்.

மிக நன்று - ஏளனக் குறிப்பு. அவ்வழி நிற்பர் - அரசன் எவ்வழி அவ்வழி ஆடவரும் யுத்தவெறி பிடித்து நிற்பர். புலியன்ன பாவகத்தான் - புலிபோன்ற குணமுடையவன்.

அரசன் யுத்தவெறி பிடித்து அலைவது குற்றமாகும்.

246 கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்
பால்கொண்டு சோமன் முகம்பற்றி உண்ணுதோர்
மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை
மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே.

கால்கொண்டு கட்டி - பிராணனது இயக்கத்தைத் தடுத்து. கனல்கொண்டு மேலேற்றி - மூலாதாரத்திலுள்ள மூலக்கனலைச் சிரசின்மேலே செலுத்தி, பால் கொண்டு - அங்குக் காணும் பால் போன்ற வெண்ணிற ஒளியைக்கொண்டு, சோமன் முகம்பற்றி உண்ணுதோர் - மதி மண்டலம் அறிந்து அங்கு உண்டாகு ஆனந்தத் தேனைப் பருகாதவராய், மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை - ஆனந்தம் விளைக்கும் என்று மயக்கங் கொண்டு கள்ளினை உண்ணும் மருட்சியாளரை, மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே - மேலும் இப்பழக்கத்துக்கு ஆளாகாதபடி செய்தல் அரச தர்மமாகும்.

மதுவிலக்குச் செய்தல் அரசனுக்குரிய கடமையாகும். 9

247 தத்தஞ் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண் டமுஞ்செயும் [1]மும்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே

தத்தஞ் சமயத்தகுதி நில்லாதாரை - தத்தமக்குரிய சமய நெறியில் நில்லாதவர்களை, அத்தன் சிவன் சொன்ன ஆகம நூல்நெறி - எந்தையாகிய சிவன் அருளிய ஆகம முறைப்படி.

பாடபேதம்: 1 அம்மையில்

எத்தண்டமுஞ் செயும் அம்மையில் - மறு பிறப்பில் எத்தகைய தண்டனையைக் கொடுத்துத் திருத்தும். இம்மைக்கே மெய்த் தண்டஞ் செய்வது வேந்தன் கடனே - எனினும் சமயநெறி நில்லாதாரை இப்பிறப்பிலேயே தக்க தண்டனை கொடுத்துத் திருத்துவது அரசனது கடமையாகும்.

சமயநெறியில் ஒழுகாதாரைத் தண்டிப்பது அரசனது கடமையாகும். 10

14. வானச்சிறப்பு

248 அமுதூறு மாமழை நீரத னாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றுங்
கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அமுதூறுங் காஞ்சிரை ஆங்கது வாமே.

அமுதூறு மாமழை நீரதனாலே - அமுதம்போன்று வளப் பத்தைத் தருகின்ற மழைப் பெருக்கால், அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றும் - சுவைப் பெருக்கும் பல மரங்கள் உலகத் தின்மேல் உண்டாகும். கமுகு ஊறுதெங்கு கரும்பொடு வாழை- பாக்கு, இளநீரையுடைய தென்னை, கரும்பு, வாழை. அமு தூறுங் காஞ்சிரை ஆங்கதுவாமே - அமுது அளிக்கும் சமாதி நிலைக்கு உதவியான எட்டி முதலியன உண்டாகும்,

காஞ்சிரை, சமாதிக்குரிய மூலிகை.
மழைநீர் உலகினைத் தளிர்விக்கும்!

249 வரையிடை நின்ற வான்நீர் அருவி
உரையில்லை உள்ளத் தகத்துநின் றூறு
நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீர்
கரையில்லை எந்தை கழுமணி யாறே.

வரையிடை நின்றிழி வான்நீர் அருவி - சிரசாகிய மலை யினின்றும் பெருகிவரும் ஒளிமயமான ஆகாய கங்கையை. உரை யில்லை - உரைப்பதற்கு உரையில்லை. உள்ளகத்து நின்று ஊறும் - அது மனமண்டலத்தில் அன்பினால் ஊறும்; ஆதலின், நுரையில்லை - பிருதிவிக் கலப்பின்மையின் நுரையில்லை. மாசி இல்லை நுண்ணிய தெண்ணீர் - நுட்பமான தெளிந்த தன்மை யுடைமையின் அழுக்கில்லை. கரையில்லை எந்தை கழுமணி ஆறே - எந்தையாகிய பாவங்களைப் போக்குகின்ற ஆறு அகண்ட மாதலின் கரையில்லை.

வான்நீர் - சிரசின்மேல் விளங்கும் சந்திரமண்டலம், அருவி-அமுதம் பெருகும் ஒளி. உள்ளத்து ஊறுதலாவது, சிந்தையில் பாய்தல்.

" சிறைபெறு நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே "

என்ற திருவாசக வரியை நினைவு கூர்க.

(வளரும்)

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adheenam
Sri Sattanathaswamy Devasthanam, Sirkali.

I visited the temple today and had an opportunity to have dharsan of the deities. I was much impressed with the devine atmosphere throughout. The temple premises has been well maintained. The present Superintendent Thiru. R. Sourirajan who is a retired Tahsildar of this District has taken sincere steps to safeguard the interests of the temple and he has taken efforts to make marvellous improvements besides increase in the revenue due to the temple by his personal supervision. He has yet many plans to make further improvements and I feel he is sure to achieve his desire within a short period. The devotees will really be touched by the prompt attention and above all by the neat maintenance of the divine place in a manner more perfect than what could be done in such vast institutions. I may boldly mention that this is the most well maintained big temple in the District.

(Sd.) K. R. Govindarajan,
10—3—1972. Spl. Dy. Collr. for Temple lands.
Thanjavur.

திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

(மலர் 31. இதழ் 5. பக்கம் 304 இன் தொடர்ச்சி)

வாய்கொடுனைப் புகழுகிலேன்
மனத்துள்ளேன் நிற்போற்றும்
தூயவன்ப ரொடுபழகேன்
துணையுமிலேன் அறிவின்றி
நாயினுங்கீழ்ப் படுமெளியேன்
நலம்பெறவை யாற்றரசே
தாயினுமின் னருள்கூர்ந்துன்
சரணளித்த ததிசயமே. (36)

(இ - ள்) வாய் கொடு உ(ன்)னை புகழுகிலேன் - தீய வெண்ணம் இன்றி வாயினல் தேவரீருடைய திருப்புகழினைக் கொண்டு புகழவும் செய்கிலேன். மனத்து உள்ளேன் - மனதிலும் கருதுதலைச் செய்கின்றிலேன். நின்போற்றும் தூய அன்ப ரொடு(ம்) பழகேன் - தேவரீரையே நினைத்துப் புகழுகின்ற தூய்மையான அடியவர் தம்மொடும் பழகுதலையும் செய்கின்றி லேன், துணையும் இல்லேன் - யாதொரு (பற்றுக்கோடும்) துணை யும்இல்லாதவன் ஆயினேன். அறிவு இன்றி நாயினும் கீழ்ப்படும் எளியேன் - நல்லறிவு சற்றும் இல்லாமல், நாயினும் கடைப்பட்ட வனயிருக்கின்ற எளிமையுடையேன், நலம்பெற - முத்திநலம் பெறுமாறு, ஐயாற்று அரசு ஏ - திருவையாற்றில் எழுந்தருளிய தேவதேவராகிய மகாதேவரே, தாயினும் இன் அருள் கூர்ந்து உன் சரண் அளித்தது - பெற்றதாயினும் சாலப்பரிந்து இனிய கருணை மிகுந்து தேவரீருடைய திருவடிகளைப் பற்றுக்கோடாக கொடுத்து அருள்புரிந்தது. அதிசயம் ஏ - பெருவியப்பினையுடைத் தாகும். எ - று.

(கு - ரை) வாய்கொண்டு என்பது வாய்கொடு என வாயிற்று. கில் - ஆற்றலுணர்த்தும் இடைச்சொல். "ஐயாற் றரசே ஆசைப்பட்டேன்" என்பது திருவாசகம். அவ்வடியே கொண்டு ஐயாற்றரசே என்றார். (பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து நீ) என்பது திருவாசகம். இதுகொண்டு தாயினும் இன்னருள் கூர்ந்து எனக் கொள்ளப்பட்டது. தூய்மை - மனம் வாக்கு காயம் ஆய முக்கரணமும் மாசின்மை, (நல்லன நாடி நினைப்பது அல்லன விடுத்து நல்லன நவிறலும், தீயவையொரீ தூயன செய்தலும் ஆம்) "வேதநெறி சைவநெறி பத்திநெறி வழாது வாய்மெய் சிந்தை தான் அரனடிக்கே செலுத்தினராய்ச் சிவாநுபவச் செல்வராகிப் பந்தம் ஆம் தொடக்கறுத்த தொண்டரே தூயவன்பர்களாம். இவர்தமையே தூயவன்பர் என்றார். பழகல் - பயிறல். இடைவிடாது புரிதல். நாயிற்கடைப்பட்ட நாயேன். நாயினுங்கடையேன் என்பன கொண்டு நாயினுங் கீழ்ப்படும் எளியேன் என அமைத்தனர். நலம் - நன்மை. ஈண்டு முத்திநலம் ஆம். கூர்தல் - மிகுதல் அளித்தது - அருள் செய்தது. அதிசயமே என்பதில் ஏகாரம் தேற்றம், இன் அருள் - இனிய கருணை. உன்னை யென்பது உனையென்பது இடைக்குறை. "துணையிலிபிணநெஞ்சே" என்பது ஈண்டுக் கருதத் தக்கது.

அதிசயமென் னுட்காட்டி
யாண்டருளுந் திருப்பஞ்ச
நதியரசே முக்கணுடை
நாயகமே! நினதடியைத்
துதிபுரிந்து வாழாமற்
சுணங்கவிர் பருஉக் கொங்கை
மதிநுதலார் தங்கலவி
மாயத்தி லழுந்தினனே. (37)

(இ - ள்) முக்கண் உடை நாயகமே - மூன்று கண்களை யுடைய நாயகரே, திரு பஞ்சநதி அரசு ஏ - திருவையாற்று எழுந்தருளிய தேவராசரே, நினது அடியை துதிபுரிந்து வாழாமல் - தேவரீருடைய திருவடிகளைச் சிந்தித்துப் போற்றிப் பிணக்கறுத்து, வாழ்க்கையுறுமல், சுணங்கு அவர் பருஉ கொங்கை மதிநுதலார்தம் கலவி மாயத்தில் அழுந்தினன் - தேமல் பூத்து விளங்குகின்ற பெரிய கொங்கைகளையும் பிறைமதி போலும் அழகிய நெற்றியினையும், உடைய இள மங்கையருடைய கலவி யெனும் முயக்கமாகிய மயக்கத்தில் அமிழ்ந்து விட்டனன்.

தருமையாதீனம்

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் காலசம்ஹார விழாவன்று

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தியைத் தரிசித்தல்



1. திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தான சப்தஸ்தானத் திருவிழாவில் ஸ்ரீ ஐயாறப்பர் கண்ணாடிப் பல்லக்கில் எழுந்தருளல்
2. திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தான ஸ்ரீ சரபேசுரர் விழாவில் தருமை 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

தருமையாதீனம்

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

திருமுலைப்பால் திருவிழா



பிரமதீர்த்தக்கரையில்

ஸ்ரீ திருஞானசம்பந்தருக்குத்

திருமுலைப்பால் வழங்கிய நிகழ்ச்சிக்குப்பின்

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

அன்பர்களுக்கு ஆசி வழங்குதல்

தருமையாதீனம்
சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் திருமுலைப்பால் விழாவில்

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
மதுரையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்குப்
பொன்னுடை போர்த்தி,
திருக்களர், திரு. தி. சுப்பையா தேசிகர் அவர்களுக்கு
"திருமுறைக் கலாநிதி"
என்னும் பட்டம் அளித்தருளல்.

பெருமானே! (இங்ஙனம் நெறி பிறழ்ந்து கிடக்கின்ற என் - அடியவனின்) உள் அதிசயம் காட்டி ஆண்டு அருளும் - ஞான மாகிய அதிசயத்தினை (உள்ளத்திடைப் பதித்துக்காட்டி) என்னறிவினுள் அறிவாய்க் காட்டி யடிமைகொண்டருளுவீராக. (எ - று).

(கு - ரை) முத்தித் தலங்களுள் ஒன்றாயிலகுவது திருவையாறு ஆகலின் மீண்டும் மீண்டும் திருப்பஞ்சநதி அரசே என்றார். "காட்டாதனவெல்லாம் காட்டித் தன் தேன்கருணை" எனுந் திருவாசகங் கொண்டு அதிசயம் என்னுட்காட்டி எனப் பட்டது. அதிசயம் அற்புதம் என்பன ஞானம் எனும் பொருளில் வந்தது மக்கட் பிறவியுற்றவர்க்குத் தக்கது முக்கணுடை முழு முதற் கடவுளின் திருவடி வழுத்தி பிறவியறுத்தலேயாம். அந் நெறி படராது மாயத்தில் அழுந்தினன் என்றார்.

"இலவு இதழ்வாய் விழ்வார் அவர்தம்
கலவி கடைக்கணித்தும் காணாது"

இறைவன் நிறை திருவடிவழுத்துமவர்க்கே விடு கிட்டிடும்; அங்ஙனம் வாழுகிலேனே; வயது முதிர்ந்துவிட்டதே; நெஞ்சிடை நிறுத்துதற்கேற்ற நெறியு மறிகிலேனே; என்செய்குவன், ஆண்டருளும் என வேண்டியவாறாயிற்று. மாயம் - நல்லது அல்லது புரியாமல் மயங்கியிருப்பது. துதி, வடமொழி - போற்றுதல் என்பது பொருள். அவிர் - விளக்கம். சிவாயநமவென்று சிந்தித்திருத்தல் தக்கது என்பது போந்த பொருளாம். சிந்தித்தால் அபாயம் ஒருநாளும் இல்லையன்றே என்பது தேற்றம், புனிதமுற்று வாழற்கொரு நெறி வகுத்திடப்பட்டுள்ளது குறிப்பாகும்.

அழுந்தினேன் மடவார்கள்
ஆசையெனும் ஆழ்கடல்விட்(டு)
எழுந்திலேன் திருவையாற்
றீச்சுரனே நினக்கபயம்
செழுந்திருவாழ் உரத்தோனும்
திசைமுகனும் விண்ணவரும்
தொழுங்கழலாம் பேரின்பத்
தோணியளித்(து) ஆண்டருளே. (38)

(இ - ள்) மடவார்கள் ஆசை எனும் ஆழ்கடல் அழுந்தினேன் விட்டு எழுந்திலேன் - இளமங்கையர் தம்மீது கொண்ட

ஆசையெனப்படுகின்ற ஆழமாகிய கடலிடை மூழ்கிப் போயி னேன். கரைகாணுது அதனைவிட்டு மேலே எழுந்திடற்கு முடியாமல் தவிப்புறுகின்றேன். திரு ஐயாற்று ஈச்சுரனே - திருவையாற்றுப் பெரும்பதிக்கண் எழுந்தருளிய ஐயாறப்பரே !, நினக்கு அபயம் - (அடியனேன்) தேவரீருக்கு அடைக்கலமாயி னன். செழும் திரு வாழ் உரத்தோனும் - நல்ல செழுமையாகிய செந்தாமரை மலரில் வீற்றிருந்தருளும் திருமகளார் உறையும் மார்பினையுடைய மாலவரும், திசைமுகனும் - நான்முகத்தோ ஞகிய பிரமதேவரும், விண்ணவரும் - விண் உலகத்தவராகிய தேவர்களும், தொழும் - இடைவிடாது வணங்குதலைச் செய்யும், கழல் ஆம் பேர் இன்பத்தோணி - திருவடிகளாகிய பேரின்ப மாகின்ற (வீடுபேறு) தெப்பத்தினை (தோணியை) அளித்து - பிறவிப் பெருங்கடலைக் கடந்து முத்தியால் கரையினையடைதற்குக் கொடுத்து ஆண்டு அருள் ஏ - ஆண்டு அருள்புரிவீராக. எ - று ஏ அசை நிலை.

(கு - ரை) மடவார்கள் - இளமங்கையர். ஆசையெனும் ஆழ்கடல் - உருவகம், நினக்கே அபயம் என்பது நினக்கபயம் என வந்தது. 'பிறவிப் பெருங்கடல் நீந்தற்கு இறைவனடியே தோணியாம் என்பர் வள்ளுவர். திருவையாற்றுத் திருவிருத் தத்தில் அப்பரடிகளார் இறைவனடிகளை ஏணியெனும் தோணி யெனும் அருளியுள்ளார்.

"பேணித் தொழுமவர் பொன்னுலகாளப் பிறங்கருளால்
ஏணிப்படி நெறியிட்டுக் கொடுத்திமையோர் முடிமேல்
மாணிக்கம் ஏத்து மரகதம் போன்று வயிரம் மன்னி
ஆணிக் கனகமும் ஒக்கும் ஐயாறன் அடித்தலமே"

— அப்பர் தேவாரம்.

ஆண்டருள்வதற்குத் தகுதியற்ற தன்னிலைமையினை யெடுத்துக் கூறி விண்ணப்பம் புரிந்தவாருயிற்று இப்பாட்டு. எழுந்திலேன் என்றதால் அழுந்தினேன் என்பது பெறப்பட்டது. ஆழ்கடலில் அழுந்தினவன் பாழ்போவானன்றி வாழ்வுவரத் தலைப்படான். அங்ஙனமுள்ள என்னையாட்கொண்டருள்வது முத்தித் தலத் திடையெழுந்தருளிய முதல்வனுகலின் அருளுவையென்பது ஒரு தலையாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(தொடரும்

"கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 31, இதழ் 5, பக்கம் 308 இன் தொடர்ச்சி)

51. சங்கப்பலகை கொடுத்தது

மேருவை வில்லாகக்கொண்ட பெருமான், வேடவுருவில் வந்து தன்னுமம் எழுதிய அம்பைவிட்டுப் பகைவனும் தென்னவனை ஓட்டிய வண்ணம் பாடினேம். இனிமேல் சங்கத்தார்க்குப் பலகைதந்து அவரோடொப்பக்கூடி முத்தமிழின் மேன்மையை நிலைநாட்டிய வகைமை கூறுவாம்.

வங்கிய சேகரன் செங்கோல் செலுத்திவாழும் நாளில், கங்கை நதி சூழும் காசிப்பதியில் பிரம்மதேவன் பத்து அஸ்வமேத வேள்விகளைச் செய்து முடித்துப் பின் கங்கையில் நீராடுவதற்காகத் தன் மனைவியர்களான சரஸ்வதி, சாவித்திரி, காயத்திரி என்பவர்களுடன் சென்றுன். நானவார் குழல்கொண்ட மூவரில் சரஸ்வதி மட்டும் விஞ்சை மாதராள் ஒருத்தி பாடிய பாடலில் உள்ளம் போக்கிப் பின் தங்கிவிட்டாள். கமலப் புத்தேள் சரஸ்வதி வரக் காலந்தாழ்க்கவே – மற்றைய நங்கையர் இருவரோடும் நீராடிக் கரையேறினுன். தாமரைக் கிழவனிடம் தாமதித்து வந்த நாமகள் 'என்னை விட்டு நீர் மட்டும் கங்கையில் மூழ்கக் காரணம் என்ன' – என்று சினந்து கேட்க, பிரம்மதேவன் கூறுகிறுன் - 'குற்றம் நின்மேலிருக்க என்னைக் கோபிப்பது முறையா? அதனுல் 'நீ எண்ணற்ற மானிடப் பிறப்பெடுத்து இக்குற்றத்தைப் போக்கிக் கொள்வாயாக' என்று சினந்து சாபமிட்டான். சாபம்பெற்ற சரஸ்வதி நடுநடுங்கி 'மனிதப் பிறப்பின் வருத்தமே யறியாத நின் துணைவியான நான் மனிதப்பிறவி பெற்று மயங்குவது முறையாகுமா! என் குற்றம் பொறுத்து அருளுக' என்றுவருந்தி முறையிட்டாள்.

ஊனிடர் அகன்றேய்! உன்னுருயிர்த் துணையாகிய நான் இந்த மானிட யோனிப்பட்டு மயங்குவது முறையா என்று கேட்டபோது, மனமிளகிய மலரோன், 'மாதே! உன் வடிவமாக

இருக்கின்ற முதலெழுத்து ஐம்பத்தொன்றினுள் ஆகாரமுதல் ஹாகாரம் இறுதியாக உள்ள நாற்பத்தெட்டெழுத்துக்களும் மண்ணில் மானிடர்களாய்ப் பிறக்கட்டும், பின் அவர்கள் பூரண கலைஞானம் பெற்ற புலவர்களாகி இருக்கும்போது எழுத்துக்களுடன் இணைந்தும் தனித்தும் இயங்கும் அகரம் போல் உயிர்களோடு இணைந்தும் தனித்தும் இயங்குகின்ற ஆலவாய் இறைவன் தாமொரு புலவராகித் திருவுருத்தரித்துச் சங்க மாமணிப் பீடத்தேறி நின்று நாற்பத்தெட்டு புலவர்களுக் கும் தலைவராகி நிற்பார், அதோடு அப்புலவர் பெருமக்களுக்கு ஆசங்கை அகற்றி அறிவூட்டிப் பெருமைதருவார்' - என்று பிரம்ம தேவன் எடுத்தியம்பினன்.

அதன்படியே அவ்வெழுத்துக்கள் நாற்பத்தெட்டும் வெவ் வேறு மக்களாய்ப் பிறந்தன. பலகலைகளிலும் தேர்ச்சிபெற்று ஆரியம் அறிந்தவர்களாகி ஏனைப் பதினெட்டு பாஷைகளிலும் புலமைபெற்றுப் பூக்களால் மட்டுமின்றி செழுந்தமிழ்ப் பாக்களா லும் அவர்கள் இறைவனை வழிபட்டுவந்தனர். தம்தம் புலமை தோன்ற எதிர்த்தவர்களை வென்று வாகை சூடிப் பாண்டியனின் தலைநகரான மதுரை நோக்கி வருகின்றார்கள்.

நிலந்தருதிருவின் பாண்டியனின் மதுரைக்கருகில் அவர்கள் வந்து கொண்டிருக்கும்போது, பற்பல கலைகளின் பயனுய்நின்ற அற்புதமூர்த்தியாம் எந்தை ஆலவாய் அடிகள் ஆங்கோர் கற்பமை கேள்விசான்ற புலமையின் செல்வராகி சொற்பதங் கடந்த தம் பாதம் இருநிலம் தோய வந்தார். மதுரை நோக்கி வருகின்றவர்களைப் பார்த்து நீவிர் யார்! எங்கிருந்து வருகின்றீர் என்று கேட்க, 'அவர்களும் அடைந்தார் பாவம் போக்கும் பொருநை நாட்டிலிருந்து வருகின்றோம்' என்றார்கள். உடனே எதிர்கொண்ட ஆலவாய்ப் புலவர் 'நீங்கள் அத்துணைபெரும் கனிவருங் கருணைக் கடவுளாம் மதுரைப் பெருமானைத் தரிசிக்க என்னுடன் வாருங்கள்' என்றழைக்க; அவர்களும் நீரே எங்க ளுக்கு அக்கடவுளாகத் தோன்றுகிறீர் என்று உபசார மொழி கூறி அவருடன் ஆலவாய் வந்தனர்.

மறைவழி ஒழுகிப் பல கலைகளிலும் தேர்ச்சிபெற்ற சான்றோர் புடைசூழ கூடல்வந்த புலவர் - ஆலவாய்க் கோயிலுள் நுழைந்த தும் மறைந்துவிட்டார். விம்மிதமடைந்த புலவர் குழாம் தம் முடன் வந்த இறைவனின் பெருங்கருணையை வியந்து போற்றி யது. வீண்ணிழி விமானமேய செம்மலைப் பலப்பல பாடல்களால் பரவி கைம்மலை உரியினர் தம் கால்தொழு திறைஞ்சிப் பின் கைதவனைக் காணச்சென்றார்கள்.

பாண்டியன் இச்சான்றோர்களின் கல்வி, கேள்வி, ஒழுக்கத்தைக் கண்டு நிறைமகிழ்வுவகையனுகி ஆலவாயழகனின் கோயிலின் வடமேற்குப் பகுதியில் சங்கமண்டப மொன்று உண்டாக்கி, அங்கமாக என்றருளிப் பல்வகைச் சிறப்புக்களையும் அவர்களுக்குச் செய்தான். புதிதாய் வந்த இச்செந்நாப் புலவர்களுக்கு அரசன் சிறப்பு நல்குவதைக் கண்டு பழைய புலவர்கள் மனம்புழுங்கி புதியவர்களை வாதிற்கழைத்துத் தோற்று ஆற்றல் குன்றி நின்றார்கள். வேற்றுப் புலத்தவர்கள் பலரும் நிறையவந்து இவர்களோடு வாதிட்டுத் தோற்றுத் திரும்புவர்.

ஒருநாள் நாற்பத்தெட்டு புலவர்களும் ஒன்றுகூடி புனையிழை பாகம் நீங்காப் புனிதன் முன்நின்று 'பெருமானே — எங்களோடு வாதம்புரிய வருவோரின் தகுதியை நாங்கள் அறியும்படி அடியேங்களுக்குச் சங்கப் பலகையொன்று அளித்தருள்க' என்று வேண்டி நின்றனர். தன்னைப் பாடிய பாணபத்திரனுக்கு வலியவே பலகையிட்ட பெருந்தகை - பலகை வேண்டிப்பாடிய புலவர்களுக்கு மறுப்பாரா? புலவர்போல் வேடங்கொண்டு தோன்றினார் தம்முடன் கொண்டுவந்த பலகையைக் காட்டி 'சதுரமாயிருக்கும் இது இரண்டுசாண் நீள அகலங்கொண்டது. சந்திரனைக் காட்டிலும் வெண்மையானது மந்திர வலிமை பெற்றது. நும்போல் அறிவுடையார்க்கெல்லாம் முழம் வளர்ந்து இருக்க இடந்தரும் இப்பலகை நுங்கட்கேற்ற அளவுகோலாகும்' என்று கூறிக் கொடுத்துவிட்டு மறைந்தார்.

காமனை முனிந்த கடவுள் நாமகள் உருவாய் வந்த நாவலர்களுக்கு வெள்ளைத் தாமரைத் தவிசையே தந்ததுபோல வெண்ணிறப் பலகை தந்த செயல் மிக்கபொருத்தமாக இருந்தது. புலவர்களும் அதனைப்போற்றி ஏற்று தூபதீப ஆராதனைகளைச் செய்தனர். முதலில் சங்கப் பலகையில் கீரனும் பின் கபிலனும் பரணனும் ஏறினார்கள். கற்றவர் அனைவர்க்கும் இடங்கொடுத்து நின்ற பலகை, சுருங்கிநின்றகலங்காட்டும் நூல்போல இருந்தது.

" இருங்கலை வல்லோ ரெல்லா மிம்முறை யேறியேறி
ஒருங்கினி திருந்தார் யார்க்கு மொத்திடங் கொடுத்து மாதன்
தருஞ்சிறு பலகை யொன்றே தன்னுரை செய்வோர்க்
[கெல்லாம்
சுருங்கிநின் றகலங் காட்டித் தோன்றுநூல் போன்றதன்றே"

மேதகைமை பொருந்திய சான்றோர்கள் நூலின் உட்பொருள் விளங்குமாறு ஏதுவும் எடுத்துக்காட்டும் கொண்டு விளக்கும்

போது அருகிருந்து கேட்ட கிளிகளும் பூவைகளுமே வாது செய்வோர்கள் வந்தால் மறுத்துரைத்து எதிர்க்குமெனில் புலவர்களின் பெருமையை வேறெப்படி விளக்குவது.

இப்படிப் பல புலவர்களும் சங்கப் பலகையில் இடம்பெற்றுக் கவிபாட - பாடல்கள் எண்ணிலடங்காமல் பெருகின. எது யார் இயற்றியது - என்பது தெரியாமல் புலவர்களுக்குள் மோதல் உண்டாகவே - சோமசுந்தரப்பெருமான் மீண்டும் புலவராய் வந்து அவரவர் பாடல்களை அவரவர்களுக்கு அறிவித்து மகிழ்வூட்டினர்.

நாற்பத்தெட்டு புலவர்களும் நனிமகிழ்ந்து நீவிரும் எங்களோடு இச்சங்கப் பலகையில் வீற்றிருக்க வேண்டும் என்று இறைஞ்ச; பீடிகை என்ற பொன்னுபரணத்தில் சான்றோர்கள் மணிகளாய்த் திகழ, இறைவன் நடுநாயக மணியாகி வீற்றிருந்தான். நதியணிந்த இந்தப் புலவரோடு நாற்பத்தொன்பதின்மரான புலவர் குழாம் முதியவான்தமிழைப் பின்னும் சிறப்புற ஆய்ந்தது.

வங்கிய சேகரன் வங்கிய சூடாமணிக்குப் புவிதந்து முடிபுனைவித்து பாசவினைப் பகை கடிந்து சங்கியல்வார் குழையானடியை அடைந்து இன்புற்றுன்

(வளரும்)

பார்வையாளர் குறிப்பு நகல்

தருமபுரம் ஆதீனம்

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

இன்று காலை ஸ்ரீ சட்டைநாதசுவாமி கோயில் தரிசனம் திவ்வியமாக கிடைக்கப்பெற்றது பெரும்பாக்கியமாகக் கருதுகின்றேன். தருமை ஆதீனத்தின்கீழ் இயங்கிவரும் ஆலயங்களின் சிறப்பைப்பற்றி கூறவும் வேண்டுமா? ஞானப்பால் பெற்ற இந்த திவ்ய க்ஷேத்திரத்தில் கோவில் கண்காணிப்பாளர் ஸ்ரீ சவுரிராஜன் அவர்கள் மிகுந்த பக்தி சிரத்தையுடன் ஆலயத்தைக் கண்காணித்து வருவது நமக்குத் திருப்தியை அளிக்கின்றது. ஞானசம்பந்தரின் வரலாற்றுச் சித்திரங்கள் சீக்கிரமே ஆலய ஓவியங்களாகும் நாளை எதிர்பார்க்கின்றோம்.

24—4—72 சரோஜினி வரதப்பன்.

சிவதருமோத்தரக் கட்டுரை எண் 5.

சிவாகமங்களைப் பூசிக்கும் முறைமை

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்.
திரு. ச. தண்டபாணி தேசிகர்

சிவாகமங்களும் திருமுறைகளும் தன்மையாலும் வடிவாலும் சிவமேயானவை. அவற்றைப் பூசிக்க எண்ணுகின்ற மனிதன் இரண்டுமுழ சதுரத்தில் வட்டமாகவோ சதுரமாகவோ நிலத்தை மெழுகி அதன்மேல் வட்டமாகவோ சதுரமாகவோ உள்ள வேதிகையை (பீடம்) வைத்து அதன்மேல் வெண் சந்தனப் பொடியால் தாமரைப்பூ வடிவத்தில் எழுதி அதன்மேல் திருமுறைகளையோ சிவாகமத்தையோ எழுந்தருளப் பண்ண வேண்டும்.

பின்னர் ஏட்டைச் சுற்றிலும் நான்கு சூரியர்களை நிறுவி வழிபட்டு சிவஞான தானம் செய்யும் ஆசிரியன் சிவாகமத்தை வழிபட்டு அன்போடும் கருணையோடும் சிவாகமங்களை ஓதுவித்தல் வேண்டும்.

ஓதுவிக்கும் முறைமை

மாணவனை வடக்குமுகமாக இருக்கச்செய்து பாடலை வாசிக்கச்செய்தல், பதம் பிரித்தல், அரும்பொருள் விரித்தல், அமைதி காட்டல் என்பவைகளை முறையாக உரைத்தல் வேண்டும். இவ்வண்ணம் சிவபுராணங்களையோ சிவாகமங்களையோ ஓதிய மாணுக்கன் இவைகளைச் சிவபெருமானைப் பூசிப்பதுபோல மனம் மகிழ்வுடன் பூசிக்கவேண்டும். பின்னர் சிவஞானிகளுக்கும் சிவயோகிகளுக்கும் சிவஞானதானம் செய்த ஆசாரியனுக்கும் அன்னபானுதிகளையும் ஆடைகளையும் அளித்து மனம் மகிழச் செய்தல் வேண்டும்.

எழுதுவோர் ஓதுவோர் முதலானேர் அடையும் பயன்

சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த அளவற்ற கருணையால் அருளிச்செய்யப்பெற்ற ஆகமங்களில் ஒருபடலத்தையேனும் ஒரு சுலோகத்தையேனும், அன்புடன் ஓதுபவர்களும் ஓதுவித்தவர்களும் பொருள்பிரித்துச் சொல்வோரும் அதனைக்

கேட்போரும் கேட்டபொருள்களைச் சிந்திப்போரும் ஆகமங்களைப் பிழை வராமல் எழுதுவோரும் பொருள்கொடுத்து எழுதுவிப்போரும் எய்தும் பயன் இத்துணை என்று இயம்பவொண்ணாதன. வேத வேதாந்தங்களை விதிப்படி ஓதி ஆசாரத்திலும் சீலத்திலும் அணு அளவும் தவறாத அந்தணர்கள் ஆயிரம் பேருக்கு அன்னம் அளித்து ஆடை அளித்து நவரத்தினங்களைக் கொடுத்து அவர்களை மகிழச் செய்வதால் உண்டாகும் பயன் இதனால் உண்டாகும்.

சிவாகமங்களை எழுதுதற்கு மான் தோலினாலாவது சீலையினாலாவது கவசம் செய்து கொடுப்பவர்க்குச் சிவலோகம் மிக எளிதில் கிடைக்கும். சிவஞானதானம் செய்தவர்களும் பெற்றவர்களும் சிவனது சீபாதத்தை வணங்குதற்கு உரியவர்கள்.

திருமுறைக்கோயில்

சிவஞான பண்டாரமாகிய சிவாகமங்களையும் திருமுறைகளையும் பாதுகாப்பதற்காகக் கருங்கல், செங்கல் இவற்றால் கோயில்கட்டி அக்கோவிலின் நடுவே சிம்மாசனத்தின் மீது திருமுறைகளை எழுந்தருளச் செய்யவேண்டும். ஏடுகளுக்குப் பொன்னாலும் வெள்ளியாலும் செம்பாலும் மற்றுமுள்ள உலோகங்களாலும் அவரவர் செல்வ நிலைக்கேற்பப் பெட்டகம் செய்து அதனுள் வைத்துப் பாதுகாத்தல் அவசியம்.

சிவாகமக் கோயில்கள் மூன்று முழம் முதல் முப்பத்து மூன்று முழம் ஈருகவும் நீளம் ஐம்பது முழ அளவினதாகவும் அமைய மண்டபம் கோயில் இவற்றைச் செய்க. சிவாகமக் கோயில்கள் ஏழு அங்குலம் முதல் அடுக்கு அடுக்காக முப்பத்திரண்டு அங்குலம் ஈருக உயரம் அமைதல் வேண்டும். இங்ஙனம் அமைந்த மண்டபத்தோடு கூடிய கோவிலின் கருவறையின் நடுவிலே சிங்காதனத்தின் மீது ஏட்டுப் பெட்டகத்தை எழுந்தருளச் செய்து நாள்தோறும் பூசித்தும், போற்றியும் படித்தும் வரவேண்டும்.

சிவாகமங்கள், நம்முடைய இந்தச் சரீரம் நிலையற்றது; இந்தச் சரீரம் உள்ளபொழுது சிவபெருமான் திருவடியை அடைதல் வேண்டும் என்ற மன உறுதி உடைய மாணக்கர்க்கு உபதேசிக்கத்தக்கவை. அதுமட்டுமல்லாமல் சிவாகமங்கள் பழுது படாமல் பாதுக்காப்பதற்காக அடிக்கடி பெயர்த்தெழுதிப் பாதுக்காத்தல் வேண்டும். ஏடு பழுதுபட்டால் அவைகளைத் திருத்தி எழுதக் கூடியவர்களைக் கொண்டு எழுதுவித்து ஆவாகனம் முதலிய செயல்களால் சிவஞான பிரதிட்டை செய்வித்தல்

வேண்டும். சிவஞான பிரதிட்டையும் சிவப்பிரதிட்டையும் ஒரே தன்மையன. பழுதுபட்ட சிவாகம ஏடுகளைக் காற்றில் பறக்க விட்டு காலில் மிதிபடச்செய்தல் கூடாது. ஏடுகளை நெய்யில் துவைத்து சிவாக்கினியில் இட்டுக் கொளுத்துதல் வேண்டும். இங்ஙனம் சிவாகமங்களைப் பாதுக்காப்போர் இருபத்தொரு தலை முறை சிவலோக பதவி அடைவார்கள். சிவாகமக் கோயிலில் திருவடி நிட்டை புரிவோர் பரமானந்த முக்தி அடைவர். போகங்களை விரும்பியவர்கள் பூமியில் வந்து மக்களாகப் பிறந்து போக போக்கியங்களை நுகர்வார்கள். சிவலோகத்தில் இருக்குங் கால் போகத்தை விரும்பின பேர்கள் பூமியில் மன்னராய்ப் பிறந்து போகங்களை நுகர்ந்து ஞான போகத்தைப் புரிந்து ஞானிகளாய் விடுபேறு அடைவார்கள்.

சிவாச்சிரமம் அமைத்தல்

அமைதியான ஆற்றங்கரை மலையடிவாரம் கடற்கரை முதலிய இடங்களிலேயே சிவாச்சிரமம் கட்டுவதற்கான இடத்தைக் கண்டுபிடித்து எல்லை கோலி ஐந்து முழ உயரம் மதிற் சுவர் அமைத்தல் வேண்டும். மதிற்சுவரை அடுத்து சோலைகளும் பொய்கைகளும் அமைத்தல் வேண்டும்.

சிவாகமக் கோயிலின் முன்புறத்தில் ஐந்து நிலைக் கோபுரமாவது ஏழு நிலைக் கோபுரமாவது எடுப்பித்தல் வேண்டும். இங்ஙனம் அமைந்த கோயில் எப்பொழுதும் தியானம் செய்யும் குகைகள் சிவத்தியானம் செய்யும் மண்டபங்கள் இவற்றை உடையதாய் இருத்தல் வேண்டும்.

யாகங்கள் தியானயாகம் ஞானயாகம் என இருவகைப்படும். அவற்றுள் தியான யாகமாவது மனம் போக போக்கியங்களைச் சென்று பற்றாது சிவபெருமானின் திருவடியிலேயே நிலைத் திருக்குமாறு பதித்து அருவுருவமாகிய எல்லாத் திருமேனி களையும் தியானித்து ஒழுகுவது. ஞானயாகமாவது ஆகமங்களை ஓதுதலும் ஓதுவித்தலும் தெளிதலும் பிறரைத் தெளிவித்தலும் அதனை நாடோறும் தெளிவித்தலும் என ஐந்து வகையாம்.

இந்த ஐந்து வகையான தியானங்கள் ஒன்றுக்கொன்று மேலானது. தியான யாகத்தின் பயன் சாருபம் பெறுதல் ஞானயாகத்தின் பயன் விடுபேறு; ஆதலால் ஞான யாகமே மிகச் சிறந்தது. ஆகையால் அதை விவரிப்போம்.

(வளரும்

வாழ்த்தும் அஞ்சலியும்

டாக்டர் வ. சுப. மாணிக்கம்
எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச். டி.,
தமிழ்ப்பேராசிரியர்
தலைவர் இந்தியமொழிப் புலம்

அண்ணாமலைநகர்
18—11—71

துறவுப் பொலிவும் தமிழ்ப்புலமையும் மக்களன்பும் எளிமையும் நடைமுறை உலகியலும் புதுநோக்கும் வாய்ந்த தாங்கள் தருமையாதீனத்தின் மகாசந்நிதானமாக வீற்றிருப்பது அறிந்து உவக்கின்றேன்.

பொதுவாகத் தமிழும் சிறப்பாகச் சைவ இலக்கியங்களும் திருமுறைகளும் தேவாரப் பண்களும் நாடு முழுதும் அயல் நாடுகளிலும் பரவத் திட்டமிட வேண்டும். ஐந்தாண்டுத் திட்டங்கள் செய்வது கண்கூடான வளர்ச்சியைக் காட்டும்.

புலவர் பட்டம் பி. ஏ., எம். ஏ. பட்டங்கள் பெற்ற இளைஞர்கள் சைவத்தொடு பெருந்தொடர்புகொள்ள வழியாது? இராமகிருட்டினர் தொண்டகம், அரவிந்தர் ஆசிரமம் போல உழவாரத் தொண்டு செய்த அப்பர் பெருமான் பெயரால் தொண்டகம் நிறுவலாம். படித்த இளைஞர்களை நிலையாகச் சேர்த்து சைவத்துறையில் பயிற்றலாம்.

தங்கள் ஆட்சிக் காலத்தில் கி. பி. ஏழாம் நூற்றுண்டுபோல நெறியெழுச்சி ஏற்படும் எனவும், சமய வரலாறு பொலிவுபடும் எனவும் மெய்யன்பர்கள் எதிர்பார்க்கின்றனர்.

SAROJINI VARADAPPAN

"Mallika"
15, Warren Road,
Madras-4,
14—11—71

நமஸ்காரம். எதிர்பாராதவகையில் திடுக்கிடும் செய்தி கேட்டு மிகவும் வருத்தமாக இருந்தது. அப்பா அவர்கள் தந்தி கொடுத்திருந்தார்கள்.

தங்களுக்குப் பெரும்பொறுப்பு ஆண்டவன் அளித்துள்ளார். தங்கள் தலைமையில் ஆதீனத்தின் பணிகள் சிறப்புற விளங்கும். எங்கள் மகிழ்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

Dr. T. M. P. MAHADEVAN
(Director)
University Centenary Building
Madras-5. India

நமஸ்காரம். 25 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பரிபூரணம் ஆனது கேட்டு வருந்துகின்றேன். தங்கள் அருட் பார்வையில் தருமபுர ஆதீனத்தில் நடந்துவரும் திருப்பணிகள் செவ்வையாக நடக்குமென்பது உறுதி.

Swami Venkatachalam,
Executive officer,
H R & C. E. (Adm.) Dept.
Registrar of Hindu Marriages.
Govt. of Tamil nadu.

13—11—71.

திருப்பெருந்திரு மகாசந்நிதானம் திருவடிகட்கு வணக்கம் பல செய்து சுவாமி வேங்கடாசலம் சமர்ப்பித்துக்கொள்வது :-

திருப்பெருந்திரு மகாசந்நிதானம், எல்லையற்றதும், மிகச் சிறப்பு வாய்ந்ததுமான தருமை ஆதீன கர்த்தராகப் பட்டம் சூட்டப்பெற்றுள்ளது, நாளிதழ்களின் வாயிலாகத் தெரிந்து, நான் பெரும் ஆவலுடன் வேண்டிக்கொண்டதும், நினைந்து நினைந்து மகிழக்கூடியதும் மிகமிக உரித்தானதுமான செயல் நிகழ்ந்தமை குறித்து எல்லையற்ற நன்றிப்பெருக்குடன் கண்ணீர் மல்கி இறைவனைத் தோத்தரித்து மகாசந்நிதானத்தின் திருப் பாதக் கமலங்களில் அன்பின் செறிவுகொண்ட என் இதயக் கமலத்தை காணிக்கையாய்ச் சமர்ப்பித்துக் கொள்கிறேன் கோடி கோடி வணிக்கத்துடன்,

எஸ். கோபாலகிருஷ்ணன்
உதவி ஆணையர்.
இந்துசமய அறக்கட்டளை ஆட்சித்துறை.
சேலம் 9.

16—11—71.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திவ்ய சமூகத்திற்கு மலரடி வணக்கம். தாங்கள் தருமபுர மடத்தில் மகாசந்நி தானமாகப் பட்டம் சூட்டப்பட்டதற்கு என் மட்டில்லா உவகை யுடன், பலவான வணக்கங்களைச் சமர்ப்பிக்கிறேன். தங்கள் ஞானமும், பக்தியும், ஆன்றோர் சான்றோரிடம் உள்ள அன்பும்,

தமிழக மக்களிடம் உள்ள பாசமும் சொல்லிலடங்காச் சிறப்புக்களாகும். தாங்கள் சைவத்தொண்டாற்றுங்காலையிலேயே இந்து மத வளர்ச்சிக்கு சமய வேறுபாடின்றி அரும்பாடுபடதங்களுக்கு நீண்ட ஆயுளையும், நிறைந்த ஆற்றலையும் அருள அன்னை காமாட்சியின் அருள் கிட்ட அவள் மலரடி தொழுகிறேன்.

மகாசந்நிதானத்தின் நிர்வாகத்தில் தருமபுர மடமும், அதனைச் சார்ந்த பல்வேறு ஆலயங்களும்; அருளும், செறிவும் விளங்கி மக்கள் தொண்டே மகேசன் தொண்டெனக்கொண்டு பணியாற்றும் என்பது திண்ணம்.

பல்லாண்டு வாழ்ந்து பாருக்குச் சேவைசெய்து, இன்பத் தமிழ்நாட்டில் மத வேறுபாடற்ற சமய வளர்ச்சிக்கு ஆக்கப்பணி புரிந்து; அருட்கலைச் செல்வராக அருள்வழங்கும் அன்புச் சுடராக ஒளிவிட்டு வீச எல்லாம்வல்ல இறைவனின் மலரடி போற்றி வணங்குவதுடன், தங்களுக்கு என் பணிவான வணக்கத்தையும் சமர்ப்பிக்கிறேன்.

முத்து. இராசக்கண்ணனுர்

எம். ஏ., பி. ஓ. எல்.,
தமிழ்வளர்ச்சி இயக்குநர்,

"குறளகம்"
சென்னை 1.
15—11—71.

அருள் நெறிய மகாசந்நிதானம் அவர்களுக்கு,

அடிமை வணக்கம். 25வது மகாசந்நிதானம் காசியில் பரிபூரணத்துவம் எய்திய செய்தியை அறந்தாங்கியில் கேள்விப் பட்டேன். அங்கிருந்து தந்திச்செய்தி ஒன்றும் அனுப்பினேன். அன்றே திருஆவுடையார் கோவிலில் மறைந்த மகாசந்நிதானத்தின் இறையருள் கலப்புப் பற்றி வணங்கி வேண்டினேன்.

தங்கள் ஞானச் செங்கோல் என்போன்ற எளியோர்க்கும் நல்லருள் பொலிய விளங்க வேண்டுமெனப் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன். எல்லா வகையாலும் தங்கள் ஞான அரசு விளக்கமும் பெருமையும் பெற்றுச் சிறக்க வேண்டுமென இறையருளை வணங்கி வாழ்த்தி நிற்கும் அடியவன்.

சித்தாந்தத் தெளிவியல்

[தருமையாதீனம் மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேலு முதலியார்; உலகத்தமிழ் மாநாட்டு (1968) மலர்; கிடைக்குமிடம்: செயலர், 'ஞானசம்பந்தம்' பதிப்பகம், தருமபுரம் (அஞ்) மாயூரம் (வழி) பக்கங்கள் : 240 : விலை ரூ. 2-75]

தமிழ்ப் பெருஞ்செல்வமாகிய சைவசித்தாந்தத்தை எடுத்து விளக்கும் இனிய உரை நடை நூல் இது. சைவசித்தாந்தத்தைப் பல்லாண்டுகளாக நூல்கள், சொற்பொழிவுகள் வாயிலாகத் தமிழ்கூறு நல்உலகிற்கு வழங்கிவரும் தனித்திறன் உடைய பெரும்புலவர் இந்நூலாசிரியர்.

பொதுவியல், பதியியல், பசுவியல், பாசவியல், சாதனவியல், பயனியல் என்று பகுத்துக்கொண்டு சித்தாந்த நூற்கருத்துக்களைத் தெளிவுற எழுதியுள்ளார் ஆசிரியர், சமயங்களின் கருத்துக்கள், வேத வேதாந்த விளக்கம், தத்துவ ஆய்வின் சிறப்பு, ஏகான்ம வாதம் முதலியவற்றின் விளக்கம், நீலகண்ட பாடியம் வைணவ பாடியம், மாத்துவ பாடியம் முதலியவற்றின் கருத்து விளக்கங்கள், புறச்சமயங்களின் வளர்ச்சி, சமயாசாரியர் சந்தானுசிரியர்கள் தென்னுட்டில் அவதரித்துப் பணியாற்றிய விழுப்பம், சந்தான வரலாறு, முதலிய கருத்துக்கள் பொதுவியலில் அமைந்து, சைவர்கள், பலநூல்களில் அறிந்துணரத் தக்க அரும்பொருள்களை யெல்லாம் ஒருசேரத் தெளிவான, எளிய, இனிய உரை நடை வடிவில் கொண்டு திகழ்கின்றது.

சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய நூற்பொருள்களை ஐயந்திரிபற இனிது விளக்குவது. அடுத்து வரும் இயல்கள் உரை நடை வடிவில் சுவையுடன் இக்கருத்துக்களை ஆசிரியர் கதை கூறுவது போன்ற ஒரு நயத்துடன் கூறிச் சென்றுள்ள முறை பசுமரத்தாணிபோற் பயில்வோர் மனத்துப் பதியத்தக்க பாங்குடையது. தருமையாதீன முதற் பெருங்குரவர் அருளிய முத்திநிச்சயப்பொருளுடன் முடித்துள்ளார் ஆசிரியர்.

தத்துவம் கற்கும் தமிழ் மாணுக்கரும், தமிழ் அறிஞரும், தவருது வாங்கிக் கற்றுப் பயன் பெற வேண்டிய இந்நூலைக் குறைந்த விலைக்கு வழங்கி, விற்பனைத் தொகையை ஞானசம்பந்தம் பதிப்பக வளர்ச்சிக்கு வழங்கியருளியுள்ளார்கள் தருமையாதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள்.

அன்புலகம் முந்துக; பெறுக; பயனுறுக. என்று ஆற்றுப்படுத்துகிறோம்.

குறிப்பு -: 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோர்க்கு 10% கழிவு உண்டு. அஞ்சற்செலவு தனி.

ஈழத்துச் சிதம்பர புராணம்

யாழ்ப்பாணத்தில், 'ஈழத்துச் சிதம்பரம்' என்று போற்றப் பெறும் காரைநகர் ஸ்ரீ சுந்தரேசுவரர் திருக்கோயில் மூர்த்தி, தலதீர்த்தப் பெருமைகளைக் கூறுமுகத்தான் எழுந்த புதிய புராண இலக்கியம் இந்நூல். இதனை எழுதி வழங்கியவர், புலவர் மணி திரு. சோ. இளமுருகனர் அவர்கள்; நவாலியூர்ச் சோம சுந்தரப் புலவரின் திருமகனர். கடந்த நாற்பது ஆண்டுகளாகத் தமிழும் சமயமுமே தம் மூச்சாகக் கொண்டு பல இலக்கியங்களை -வசன நூல்களை எழுதியவர்; இனிய கவிஞர். அவரது இப்புராண நூலுக்கு அவர் துணைவியார் பண்டிதைமணி பரமேசுவரி அம்மையாரே திறமிக்க உரையெழுதியிருப்பது குறிப்பிடற்குரியது. 806 அழகிய செய்யுட்களைக்கொண்ட இப்புராண நூல் கற்பனை, சைவசித்தாந்தக் கருத்துவளம், (பக். 300, 341, 558 முதலியன) இலக்கிய ஆட்சி, சொல்லழகு முதலிய பலவகைகளில் சிறந்து, ஆசிரியரின் கவிதைத்திறத்தை விளக்கி நிற்கின்றது. பத்துச் சருக்கங்களை உடையது. பா-5 (சருக். 1) பா-81-83 (சருக். 3) முதலிய பாடல்கள் நயம் உடையவை. திருவிழாத் தத்துவங் களை விழாவயர் சருக்கத்தில் ஆசிரியர் இனிது ஓதியுள்ளார்.

தருமையாதீனம் 25 ஆவது மகாசந்நிதானம் கயிலைக் குருமணி அவர்களுடைய வாழ்த்துரை, நூலின் முன் அமைந்து இப்புராண நூலின் இனிமைகளை விளக்கித் திகழ்கின்றது. 'தமிழிலக்கியங்களிற் புதிய தெய்வத் தமிழ்ப் பணியாக விளங்கிச் சிறப்பதாக' என்று ஸ்ரீலஸ்ரீ குருமணியவர்கள் வாழ்த்திற் குறிப் பிட்டுள்ளார்கள்.

பண்டிதர். சிவத்திரு. க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள் தம் முயற்சியால் இதனை ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானச் சார்பில் வெளியிட்டிருக்கின்றார். நடேசர், சிவகாமி-வண்ணப் படங்கள் நூல் முகப்பில் உள்ளன. அழகான கட்டமைப்பு.

பக்திநலம் கனிந்த இப்பெருநூல் ஈழத்துச் சிதம்பர மான்மி யத்தை இலக்கிய வளத்துடன் எல்லோரும் அறிய உணர்த்து வதால் சைவப்பெருமக்கள் மனைதோறும் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

[கிடைக்குமிடம்: ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானம். காரைநகர். இலங்கை; பக்கங்கள் 692; விலை ரூ. 20.]

— சொ. சிங்காரவேலன்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அட்டகம்

(வரலாற்றுச் சித்திர விளக்கத்துடன்)

[தருமையாதீன முதற்பெருங் குரவர் அருளிய எட்டு நூல்கள்; விரோதிகிருது குருபூசை விழாமலர்; 118 பக்கங்கள்; கிடைக்குமிடம்: செயலர், ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம் (அஞ்) மாயூரம் (வழி); விலை ரூ. 1—00]

தருமையாதீனம் தெய்வத் தமிழ்ப் பண்ணையாக விளங்கி வரும் அறநிலையம். கி. பி. 16ம் நூற்றாண்டில் இதனை நிறுவிய முதற்பெருங்குரவர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பேரருளாளர், சீவில்லிபுத்தூரில் தோன்றி மதுரையில் ஸ்ரீ சொக்கநாதரைப் பூசித்துக் கமலைஞானப்பிரகாசரைக் குருநாதராகக்கொண்டு தருமைக்கு எழுந்தருளி வில்வாரணியத்தைத் தருமபுரம் ஆக்கி, மானும் புலியும் ஒரு துறையில் நீர் பருகுமாறு செய்த அருள் வள்ளல்; கருணைக்கடல் சிவானுபவ ஞாயிறு, அருள்பழுத்த திருவுள்ளத்துடன் சிவஞான சித்திநெறி விளங்க ஞான உபதேச மரபை வாழவைத்த பெருமான். இப்பெருமான் அருளிய எட்டு நூல்களாவன; சொக்கநாத வெண்பா, சிவபோகசாரம், சொக்கநாதக் கலித்துறை, ஞானப்பிரகாசமாலை, திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், சோடசகலாப் பிராசாத சட்கம், முத்திநிச்சயம், நவரத்தின மாலை இவை முழுதும் இந்நூலில் தரப்பெற்றுள்ளன. ஆதிபரமாசாரியரின் அருள்வரலாறு முதற்கண் அழகிய, இனிய நடையிலும் பிற்பகுதியில் வரலாற்று, வண்ணச் சித்திர அமைப்புடனும் விளங்குகின்றது.

மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள் இந்த அட்டகம் பற்றிய ஆய்வுரை ஒன்றை அழகுபெற எழுதி வரலாற்றின் பின் தந்துள்ளார்கள். நூல்களில் அமைந்த அரிய கருத்துக்கள், உருக்கமான பாடற்பகுதிகள், தெளிந்த பகுதிகள் முதலியவற்றை எடுத்துக்காட்டியுள்ளார்கள். படிப்போர்க்கு உறுதுணை பயக்கும் இந்த ஆய்வுக் குறிப்புக்கள் இப் பதிப்பிற்குச் சிறப்பாக உள்ளன எனலாம்.

இப்போது 26 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இந்த நூலைக் குறைந்த விலைக்கு வழங்கி, இதன் விற்பனைத் தொகையை "ஞானசம்பந்தம்" பதிப்பக வளர்ச்சிக்கு நன்கொடையாக்கியுள்ளார்கள்.

சைவக்குடியிற் பிறந்த ஒவ்வொருவரும் தவறாது வாங்கிப் பயின்று இருமைப்பயனும் எய்துவார்களாக,

குறிப்பு :- 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோர்க்கு 20% கழிவு தரப்படும். அஞ்சற்செலவு தனி.

செய்திகள்

தருமையாதீனத்தில் :

அப்பர் குருபூஜைவிழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் 7—5—72 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாவை முன்னிட்டு, சைவசமயாசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பட்டன. அன்று மாலை சிவிகையில் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவீதியுலா பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தொடு நிகழ்வுற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி திருமுறை வாணர்களுக்குப் புத்தாடைகள் வழங்கி, அற்புத விளக்க விரிவுரையைத் தொடங்கி வைத்து ஆசி வழங்கினுர்கள். அறிஞர்களால் அற்புதவிளக்க விரிவுரைகள் ஆங்காங்கே நிகழ்த்தப்பட்டன.

அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

திருப்பனந்தாளில் :

சித்திரைத்திங்கட் பெருவிழா

தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சைத்ர மகோற்சவம் 18—4—72 முதல் 27—4—72 முடிய சிறப்பாக நடைபெற்றது. தீர்த்தத் திருநாள் 27—4—72 அன்று நிகழ்ந்தது. அன்று கொள்ளிடத்திற்குப் பெருமான் தீர்த்தம்கொடுக்க எழுந்தருளுவது சிறப்பு நிகழ்ச்சி. பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு வழிபட்டு மகிழ்ந்தனர்.

நாள்தோறும் மாலை 6 மணி முதல் தொடங்கி சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. 21—4—72 வெள்ளிக்கிழமை திருச்சி தேசியக் கல்லூரிப் பேராசிரியர், திரு. இரா. இராதாகிருஷ்ணன் எம். ஏ., அவர்கள் "அம்மையார் வாழ்வும் வாக்கும்" என்பது பற்றியும், 22—4—72 சனிக்கிழமை தஞ்சை திருமதி. டி. ஆர். கமலாமூர்த்தி குழுவினரின் "திருஞானசம்பந்தர்"

என்ற தலைப்பில் இன்னிசைக் கதையும், 23—4—72 ஞாயிற்றுக் கிழமை சென்னை திருக்கோயில் ஆசிரியர், சித்தாந்தப் புலவர் மணி, திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல், அவர்கள் "திருப்பனந்தாள் திருப்பதிகங்கள்" பற்றியும். 24-4-72 திங்கட் கிழமை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான், சிரோமணி, திரு வி. சபேசன் "திருவாசகத்தேன்" என்பது பற்றியும்விரிவுரை நிகழ்த்தினர். 27-4-72 வியாழக்கிழமை ஆதீனத் தேவாரப்பாடசாலைத் தலைமையாசிரியர், திருமுறைக் கலாநிதி திரு. ஆர். வேலாயுத ஓதுவார் குழுவினர் ' குங்குலியக் கலயர்" என்ற தலைப்பில் இன்னிசைக் கதை நிகழ்த்தினர்.

திருமுறை விழா :

30—4—72 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி அளவில் திருமுறைவிழாவும் தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் நடை பெற்றன. திருப்பனந்தாள் பெருநிலக்கிழார், திரு. டி. எம். சடையப்பப் பிள்ளை அவர்கள் தலைமையில் திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி முதல்வர், திரு. கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L. அவர்கள் "அடியவர் பெருமை" என்பது பற்றி யும், தருமையாதீன சமயப்பிரசாரகர், திரு. கோ. சிவஞானம் அவர்கள் "திருமுறைச் சிறப்பு" என்பதுபற்றியும் விரிவுரையாற் றினர். தேவாரவகுப்பு மணவிகளுக்குப் பரிசு வழங்கப்பெற்றது. இரவு பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தொடு யானைமேல் திருமுறைகள் திருவிதிஉலா நிகழ்ந்தது.

திருவையாறு தேவஸ்தானத்தில் :

தருமையாதீனத்துக்குச் சொந்தமான, திருவையாறு ஸ்ரீபஞ்ச நதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 18—4—72 முதல் 27—4—72 முடிய பிரமோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. 29—4—72 அன்று சப்தஸ்தானம் ஸ்ரீ ஐயாறப்பர் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி யாரோடு ஏழூர்களுக்கு எழுந்தருளி அருட்காட்சிவழங்கும் சிறப்பு விழா நடைபெற்றது. அன்பர்கள் பலரும் கண்டு களித்து இன்புற்றனர், விழாக் காலங்களில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

21—4—72 வெள்ளிக்கிழமை, நாகை தேசிய உயர்பள்ளித் தமிழாசிரியர், தருமையாதீனப் புலவர், வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் அப்பர்பெருமான் பற்றியும், 23—4—72 ஞாயிறு மாலை திருக்கருகாவூர் சமயப் பிரசாரகர், திரு. கோ. சிவ ஞானம் நந்தியெம்பெருமான் பற்றியும், திருப்பனந்தாள்

செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர், திரு. கு. சுந்தரமூர்த்தி ஐயாறன் அடித்தலம் பற்றியும் விரிவுரையாற்றினர். 25—4—72 செவ்வாய் தஞ்சை பி. ஆர். திலகவதி குழுவினர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பற்றி இன்னிசைக்கதை நிகழ்த்தினர்.

சீகாழியில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் திருநிலை நாயகி அம்பாள் சமேத ஸ்ரீபிரமபுரீசுவர சுவாமிக்குப் பிரமோற்சவம் 18—4—72 அன்று கொடியேற்றமும், 19—4—72 அன்று திருமுலைப்பால் திருவிழாவும், 21—4—72 அன்று வெள்ளிரதக் காட்சியும், 23—4—72 அன்று திருக்கல்யாணமும், 25—4—72 அன்று திருத்தேர்த் திருவிழாவும், 27—4—72 அன்று தீர்த்தத் திருவிழாவும் ஆக பத்துநாள் விழா சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் காலை மாலை இருவேளைகளிலும் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா சிறந்த நாதசுவர இன்னிசை முதலியவற்றுடன் நடைபெற்றது.

19—4—72 அன்று சைவ சமயாசாரியர்களுள் முதல்வராகிய திருஞானசம்பந்தருக்குப் பெருமான் காட்சி வழங்கி, உமையம்மை பொற் கிண்ணத்தில் ஞானப்பால் வழங்கிய திருநாள். அன்று தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளினர்கள். மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் விழாவிற்கு எழுந்தருளியது குறிப்பிடத்தக்கது. காலை 9 மணி அளவில் திருஞான திருஞானசம்பந்தர் சிவிகையில் எழுந்தருளச்செய்யப்பெற்றார். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை வழங்கி திருக்களர், திருமுறைப்பண்ணிசைவாணர் திரு. தி. சுப்பையா தேசிகர் அவர்களுக்கு 'திருமுறைக்கலாநிதி' என்னும் பட்டம் பொறிக்கப்பெற்ற பொற்பதக்கம் வழங்கியருளினர்கள்.

அடுத்து மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுலைப்பால் விழாவின் சிறப்புக்களைக்கூறி அற்புத விளக்கவிரிவுரைகளைத் தொடங்கி வைத்தார்கள். பின்னர் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், பாலகவி, திரு. வே. இராமநாதஞ்செட்டியார், மகாவித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர், மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார், திரு. வி. சா. குருசாமி தேசிகர், திரு. சொ சிங்காரவேலனர், திரு. வி. சபேசன், திரு. இரா. செல்வக்கணபதி,

திரு. கோ. சிவஞானம், திரு. ஆர். வேலாயுத ஓதுவார், ஆகியோர் அற்புதவிளக்க விரிவுரையாற்றினர். பகல் 11-45 மணிக்கு திருமுலைப்பால் வழங்கும் காட்சி நிகழ்ந்தது. பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடியிருந்து கண்டு மகிழ்ந்தனர்.

விழாவையொட்டி நாள்தோறும் மாலை 6 மணி முதல் திருமுறை மாநாடு நிகழ்ந்தது. கருத்தரங்கங்கள், பட்டிமண்டபங்கள், கவியரங்கம், மகளிர் அரங்கம், இன்னிசைக்கதை, இன்னிசை, பொம்மலாட்டம் முதலிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

திருக்கடவூரில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத்திங்கட் பெருவிழா 18—4—72 செவ்வாய்க்கிழமை முதல் தொடங்கி நடைபெற்றது. 20—4—72 அன்று திருக்கல்யாணக் காட்சியும், 22—4—72 அன்று இடபவாகனக் காட்சியும், 23—4—72 அன்று காலசம்ஹார தரிசனமும், 25—4 72 அன்று திருத்தேர்த் திருவிழாவும், 27—4—72 அன்று தீர்த்தத் திருவிழாவும் சிறப்பாக நடைபெற்றது. 23—4—72 அன்று மார்க்கண்டேயருக்காகப் பெருமான் காலனைக் காய்ந்த திருநாள், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி காலசம்ஹார தரிசனம் செய்து அன்பர்களுக்குப் பிரசாதம் முதலியன வழங்கியருளினர்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் காலசம்ஹாரக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர். “ மார்க்கண்டேயர் வரலாறு ” இன்னிசைக்கதையாக, திரு. பவானி - கண்ணப்பர் குழுவினரால் நிகழ்த்தப்பட்டது. இவ்விழாவின் தொடர்பாக நாள்தோறும் மாலை 6 மணி அளவில் அறிஞர்கள் பலர் சமயச்சொற்பொழிவு ஆற்றினர்கள்.

திருமுறை விழா

22—4—72 சனிக்கிழமை திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றன. திருச்சி, திருக்குறள் வேள். திரு. ஜி. வரதராசப்பிள்ளை, B. A., அவர்கள் விழாத் தலைமையுரையாற்றி தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர்கள். திருக்கருகாவூர். திரு. கோ. சிவஞானம் அவர்கள் குங்குலியக்கலையர் என்ற பொருள் பற்றிப் பேருரையாற்றியபின் பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத் தொடு யானைமேல் திருமுறைகளின் திருவீதியுலா நிகழ்ந்தது.

திருவையாற்றில் திருமுறை விழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 1—5—72 திங்கட்கிழமை மாலை 6 மணி அளவில் திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது. தஞ்சைத் துணை ஆணையர். திரு. S. கோதண்டபாணி B. SC., B. L அவர்கள் தலைமையமர்ந்து திருமுறைகளின் சிறப்பு அவற்றைப் படிப்பதால் வரும் பயன் முதலியவற்றை விளக்கித் தலைமையுரையாற்றினர்கள். திருவை யாறு மாவட்ட முன்சிப். திரு. N. கோவிந்தராஜுலு B. A., B L. அவர்கள்சிறப்புரையாற்றி திருமுறைகளைப்படிப்பதின் இன்றியமை யாமையை விளக்கி, தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர்கள். தருமையாதீன சமயப்பிரசாரகர் திரு கோ. சிவஞானம் அவர்கள் திருமுறைப் பயன் என்ற தலைப்பில் சொற்பெருக்காற்றினர்கள். பின்னர் திருமுறைப் பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தொடு யானைமேல் திரு முறைகள் திருவீதியுலா நிகழ்ந்தது. அன்பர்கள் பலர் கலந்து கொண்டு திருவருள் பெற்றனர்.

சீகாழியில் திருமுறை விழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீசட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் 24—4—72 திங்கட்கிழமைமாலை 6 மணி அளவில் ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருக்கோயிலில் சீகாழி பெரு நிலக்கிழார் திரு. R வைத்தியநாத முதலியார் அவர்கள் தலைமை யில் திருமுறை விழாவும், தேவார வகுப்பு ஆண்டு விழாவும் சிறப் பாக நடைபெற்றன. தலைவர் அவர்கள் குழந்தைகள் சிறுவயது முதற்கொண்டே சமயப் பற்றுடன் திகழவேண்டும், தேவார திருவாசகங்களைக் குழந்தைகள் எல்லோரும் படிக்கவேண்டும் என்று தமது தலைமையுரையில் குறித்து, தேவார வகுப்பு மாண வர்களுக்குப் பரிசுகள் வழங்கினர்கள். இரவு பண்ணிசைவாணர் களின் திருமுறைப் பாராயணத்தொடு யானைமேல் திருமுறைகள் திருவீதியுலா நிகழ்ந்தது

சென்னை சமயப் பிரசார நிலையத்தில் சோமவார வழிபாடு

தருமையாதீன, மடாலய தேவாலய சென்னை, சமயப்பிரசார நிலையத்தில் சைவ சமய நாயன்மார் குருபூஜை விழாக்களும் பிற விழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றன. 6—3—72 13—3—72, 20—3 72, 27—3—72 ஆகிய சோமவார நாட்களில் திருக்கயிலைப் பதிகப் பாராயணத்துடன் வழிபாடு நிகழ்த்தப் பெற்றது.

நாயன்மார் குருபூஜை விழா

2—3—72, 10—3—72, 20—3—72, 22—3—72, 24—3—72 ஆகிய நாட்களில் முறையே எறிபத்த நாயனர், காரி நாயனர் நேச நாயனர், கண நாத நாயனர், முனையடுவார் நாயனர் குரு பூஜை விழாக்கள் சிறப்பாக நிகழ்ந்தன. நிலைய தேவார ஆசிரியர் திரு. S. ஞானப்பிரகாசம் அவர்களால் திருமுறைப் பாடல்கள் பாடப்பெற்றன. வித்துவான். திரு. ப. வடிவேல் பிள்ளை அவர்களும், திரு. V. N. ஆறுமுகம் B. com., F. C. A. அவர்களும் புராண விரிவுரை நிகழ்த்தினர்கள்

கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

21—3—72 அன்று சமயப்பிரசார நிலையத்தில் வைத்தீசுவரன் கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா, சென்னை, கல்வி இயக்குநர் அலுவலகம் அறிவியல் கல்வி அலுவலர் திரு. J. கோபாலகிருஷ்ணன் B.A., B.T. அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. கோடம்பாக்கம் திரு. S. வடிவேல்பிள்ளை அவர்கள் தலைவர் அவர்களை நிலையத்தின் சார்பில் வரவேற்றூர்கள். தலைவர் தமது தலைமையுரையில், வேளூர் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழாவில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப்பெருமானின் திருவருளால் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டியது என்றும் திருவருளை வழுத்துவதாகவும் குறிப்பிட்டார்கள். வேளூர் தேவாரம், திருப்புகழ், நாமாவளிப் பிரார்த்தனைக்குப் பின்னர் சந்தனக்குழம்பு, விபூதிப் பிரசாதம் வழங்கப்பட்டது.

சமயபாட வகுப்பு

சென்னை, சமயப்பிரசார நிலையத்தில், 5—3—72, 12—3—72 19—3—72, ஆகிய ஞாயிற்றுக்கிழமை நாட்களில் மாலை 4 மணி முதல் 5-30 மணிவரை சிவஞானசித்தியார் பாடவகுப்பு திரு. N. R. முருகவேள் M. A., M. O. L. அவர்களால் நடத்தப்பெற்றது.

மாதாந்தர வழிபாடு

26—3—72 ஞாயிற்றுக்கிழமை சமயப்பிரசார நிலையத்தின் மாதாந்தர வழிபாடும், சமயச் சொற்பொழிவும், சென்னை கோவூர் ஸ்ரீ சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. நிலையத்தின் சார்பில் ஸ்ரீ சௌந்தராம்பிகை சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரசுவாமிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பட்டன. ஆலய அறங்காவலர்களும், நிர்வாக அதிகாரி அவர்களும் கிராமத் தலைவர் அவர்களும் எல்லோரையும் வரவேற்று வழிபாடு சிறப்புறச் செய்தனர். வித்துவான். திரு. புண்ணியகோடி அவர்கள் கோவூர் பற்றிய சிறப்புச் செய்திகளைக் கூறி சொற்பொழிவாற்றினர்கள். வித்துவான். திரு. ஆறுமுகம் அவர்கள் நன்றி கூறினர்கள்.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

திரு. K. முத்துஜோதிடர்

(பரிதாபிஸு வைகாசிமீ 1உ முதல் 31உ முடிய)

(14—5—72 முதல் 13—6—72 முடிய)

மேற்படி வைகாசிமீ முதல் தேதி பானுவாரத்தில் காலை நாழிகை 3 விநடி 52க்கு விருஷப லக்னத்திலேயே லோக இரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் வைகாசி மாத பிரவேசம், முதல் யாமத்தில் செய்கிறார். பானுவாரத்தில் சூரிய சங்கிரமணம். உத்தமவாரம் மேற்படி காலபலன். தர்மபூமிகள் தர்மிஷ்டர்கள் ஆஸ்தீக சஜ்ஜனங்கள் எல்லோருக்கும் சௌக்கியமாகும். தெய்வசக்தி ஓங்கும். ஷை விருஷபத்தில் சனி தனிமையில் ராஜா மந்திரியான குருவுக்கு 6ல் அமைந்திருப்பதால் நாஸ்தீக பலமே தான். உலகத்தை முத்தொழிலும் நடத்தி வருகிறது. காப்பாற்றுகிறது என்பதை பிரதானமாகக்கொண்ட மானுட ரூபத்தோடு கூடிய பேசும் தெய்வமாகிய மனுஷ்ய தேவர்கள் உத்பாதங்களால் பாதிக்கப்பட்டு அகால மரணத்தையும் துக்கத்தையும் அடைவார்கள். தர்மமே ஜயம் என்றும் தெய்வமே கதி என்றும் பிராசீனம்போல் பயத்துடன் இருப்பவர்களும் தர்ம பூமிகளும் ரக்ஷிக்கப்படுவார்கள். தெய்வசக்தி சாதுக்களுக்குத் தோன்றும்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனையே தரும். வெகுதூரத்திலிருந்து அழைப்புப்பத்திரம் வரும். படிப்பு விருத்தியாகும். எதிர்பார்த்துக்கொண்டு இருந்த காரியங்கள் எல்லாம் நடைபெறும். வரவுக்கு மிஞ்சின செலவுகள் ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

விருஷப ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். ஜீவன விஷயமாக அடிக்கடி இடம் மாறுதல் ஏற்படும். குடும்பத்தில் தொல்லைகள் இருந்துகொண்டே இருக்கும். மேலோர்

பெரியோர்களின் அன்பினல் சகல காரியமும் சாத்தியமாகும். படிப்பு விருத்தியடையும், நஷ்டமான பொருள் கொஞ்சம் கொஞ்சமாக வந்துசேரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ – திருவாதிரை–புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுன ராசி 9 பாதங்களும் சுபமாகவே இருக்கும். புதிதான தொழில் விருத்தியும், ஸ்தாவர ஜங்கமங்களில் கிரய விக்ரயங்களும், கடன் வியாதி நிவர்த்தியும், ஜாதகரால் பலருக்கு நன்மையும், கீர்த்தியும் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். சகல காரியங்களும் தவக்கத்துடன் நடக்கும்; பொருளாதாரத்தில் அதிகத்தொல்லைகள் ஏற்படும். புத்திக்கு எப்பொழுதும் சஞ்சலத்தையே கொடுக்கும். தெய்வபலம் முன்னின்று, சகலத்தையும் காக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் $\frac{1}{4}$.

சிம்மராசி 9 பாதங்களும் சுபத்தைத் தரும். உத்தியோகத்தில் உயர் பதவி கிடைக்கும். வம்சம் விருத்தியாகும். ஆரோக்யம் உண்டுபண்ணும். படிப்பு விருத்தியாகும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும், தெய்வபக்தி அதிகமாகும். எல்லாக் காரியங்களும் நினைத்தபடி சாத்தியமாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$.

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்ர பலனைத்தரும். மேலோர் பெரியோர்களால் விசேஷமான நன்மைகளும், அடிக்கடி வெளியூர் சஞ்சாரங்களும், புத்திராதிகளால் நன்மையும், உலகபிரசித்திகரமான காரியங்களும், ஏற்படும். வரவு, செலவு சமமாகும். புதன், வியாழன் சுபமாகும்.

7, துலாம் – சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$

துலா ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். சுபமான காரியங்களாலும், யக்ஞ யாகாதிகளாலும் தர்மமான செலவுகள் அதிகமாகும். எதிர்பாராத தனலாபம் கிடைக்கும். தூர தேச பிரயாணம் ஏற்படும். குடும்ப சுகம் அதிகமாகும். தெய்வீகத் தன்மை பிரகாசித்துக்கொண்டு இருக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். வியாதி நீங்கும். விவாஹாதி சுபமான காரியங்கள் நடக்கும், தானதர்ம பிரதிஷ்டாபலன் களும் கிடைக்கும். தொழில் ஓங்கும். நஷ்டமான பொருள்கள் வந்துசேரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். கடன் நீங்கும். வியவஹாரம் ஜெயிக்கும். புத்திராதிகளால் சந்தோஷம் ஏற்படும். குடும்பம் ஓங்கும். மேலோர் பெரியோர்களின் அன்பினுலும், தெய்வசக்தியாலும் சகலமும் சாத்தியமாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

10. மகரம்-உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனையே தரும். அதிக மான தொந்திரவுகள் வேலை பார்க்கும் இடத்தில் ஏற்படும். புதிதாகக் கட்டிடங்கள் வாங்குதல்ஏற்படும். வியவஸாயம் விருத்தியாகும். மேலோர் பெரியோர்களின் அன்பினல் சகலமும் சாத்திய மாகும். உலகப் பிரசித்தி ஏற்படும். வியாழன், வெள்ளி சுப மாகும்.

11. கும்பம் – அவிட்டம் சதயம் ½ –பூரட்டாதி–¾,

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரமானபலனைத் தரும். ஸ்திர மில்லாமல் தொழில் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும். மேலான பதவிகள் ஏற்படும். கிரகசுகம் அதிகமாகும், வாகனதி யோகங்கள் உண்டாகும். பொருளாதாரத்தில் எவ்வளவு வந்தாலும் பற்றுக்குறை ஏற்படும். மேலோர் பெரியோர்களின் பலத்தில் சகலமும் சாத்தியமாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபமானபலனையேதரும். புதியதான தொழிலால் விசேஷமான நன்மை ஏற்படும். படிப்பு விருத்தியாகும். கீர்த்திப்பத்திரம் கிடைக்கும். துக்க நிவர்த்தியும் ஆரோக்கியமும் உண்டாகும். தெய்வபலம் முன்னின்று காக்கும் திங்கள், செவ்வாய் சுபமாகும்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள்
தருமையாதீனத் திருமடத்திலுள்ள
சண்முகவிலாசக் கட்டிடத்தைத் திறந்துவைத்தல் (1956)

தருமையாதீனம் சண்முகவிலாசக் கட்டிடத் திறப்புவிழாவில்:



ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின் திருமுன்னர் திருப்பனந்தாள் காசிமடம்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் திருமுறைப்பாராயணம் செய்தல்.

ஸ்ரீ கேதார நாத யாத்திரையில்:



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியும்,
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகளும்
ஸ்ரீ கேதார நாதருக்குப் பாலபிஷேகம் செய்தல்.

கனகாபிஷேகவிழாவில் :

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளை,

திருப்பனந்தாள் காசிமடம்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள்
பொன்மலர்களால் அர்ச்சித்தல் (1961.)